www.tamilarangam.net

raya

இரவல் தாயகம்

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 A..IERES SUR -
- SEINE ; FRANCE

பெப்ரவரி
1992

இரவல்: 1

# "அமைதிக்காக அனைத்து மக்களும் ஒன்றுபடுங்கள்"

## — இலங்கை சமாதானம், நீதிக்கான ஒத்துழைப்பு மாநாட்டில் கோரிக்கை

(எம். ஸ்ரீமுருகன்)

யுத்தத்தினால் நாட்டின் மூலவளங்களாக விளங்கும் அப்பாவி மக்களே இறக்கின்றனர். சமாதான சூழ்நிலையை மேலும் குழப்பாமல் நாட்டில் அமைதி ஏற்பட பொதுமக்களும் அரசும் மனப்பூர்வமாக செயல்பட வேண்டும். இதுவே இந்நாட்டு மக்களுக்கு நாம் விடுக்கும் கோரிக்கை.

இவ்வாறு இலங்கை சமாதானம், நீதிக்கான, உலக ...துழைப்பு மாநாட்டின் ...ணைப்பதிகாரி ...வண. ...கானந்தா கூறினார்.

கொழும்பில் ...நேற்று ...த்திய பத்திரிகையாளர் ...நாட்டில் இதனைத் தெரி...த்த அவர் முதலில் நாட்...ல் சமாதானம் தோன்ற ...வண்டும். அதுவே பொரு...தார அபிவிருத்திக்கான ...ல காரணம் என்றார்.

அவர் தொடர்ந்தும் ...றியதாவது:

சமாதானம் குறித்த ...ண்ணப்பங்கள் தொடர்...பாக கையெழுப்பங்கள்வாங்கியுள்ளோம். பெரும்பான்மையான மக்கள் சாந்தியையும் சமாதானத்தையுமேவிரும்புகின்றனர்.

யுத்தம்தொடரட்டும் என எதிர்பார்க்கும் மக்களுக்கு இதுவரையில் உண்மையான நிலைவரம் சரியாகவிளக்கப்படவில்லை. அதனாலேயே அவர்கள் கண்மூடித்தனமாக யுத்தத்தை விரும்புகின்றனர். அவர்களுக்கும் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை எடுத்துக் கூறினால் சமாதானத்தையே விரும்புவார்கள்.

சமாதானத்தின் அவசியம் யுத்தத்தின் கொடுமை பற்றி ஊர் ஊராக சென்று விளக்கவுள்ளோம்.

அரசுக்கும் புலிகளுக்கும் அப்பாவி மக்கள் யுத்தத்தினால் படும் துயரங்களை விரிவாகஎடுத்துரைக்கவுள்ளோம்.

அதேநேரத்தில் நாட்டின் முழு அதிகாரமும்பரவலாக்கப்பட வேண்டும். அவ்வதிகாரம் ஓரிடத்தில் தங்கிவிடக் கூடாது. இதுவும் யுத்தம் தொடர்வதற்கு ஒரு காரணமாகும்.

### ஞானவன்ச தேரோ

இடையில் அங்கு வெள்ளவத்தை ஞானர்பிமானவன்ச தேரோ விளக்கமளிக்கையில் கூறியதாவது:

அமைச்சர் தொண்டமான் சமாதானம் குறித்து சில யோசனைகளை முன்வைத்துள்ளார். இதனை எடுத்தெடுப்பிலேயே எதிர்த்து தகர்த்து விடக்கூடாது. யாரும் எந்த யோசனையையும்ஜனநாயக நாட்டில் முன்வைக்கலாம். அதன் சரி-பிழைகளை ஆராய்ந்து முடிவை சொல்ல வேண்டுமே தவிர முயற்சியை தடுக்க எண்ணக்கூடாது.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு அதிக அதிகாரம்வழங்கப்படுவதே தொண்டமானின் யோசனையென சிலர் நினைக்கிறார்கள். அந்த யோசனைகள் என்னவென்பதை கலந்து ஆராய வேண்டும்.

தமிழ் மக்களுக்கு இதுவரையிலிருந்த அரசாங்கங்கள் கொடுத்த வாக்குறுதிகளை, நிறைவேற்றாததினாலேயே இப்போது பிரச்சினை எழுந்துள்ளது. இதனை யாரும் மறுக்க முடியாது.

இன்றைய அரசாங்கம் தேர்தலில் வென்றால் தமிழ் தலைவர்களை அழைத்து பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காணவிருப்பதாக வாக்குறுதி அளித்தது.

ஆனால் இது வரையில் அவ்வாறுபேசாது யுத்தத்தை மட்டுமே தொடர்ந்தது.

தமிழர்களுக்கு அரசு கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்பதை நாம் இதய சுத்தியாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

1956 இல் பண்டாரநாயக்கா சிங்கள மொழி மாத்திரம் எனும் சட்டத்தை கொண்டு வந்தார். இதன் பாதிப்புக்கள் அவருக்கு புரிந்ததாலேயே, செல்வநாயகத்தை அழைத்து ஒப்பந்தம் ஒன்றை நிறைவேற்ற முயன்றார். அதனையும் பௌத்த பிக்குகள் குழப்பிவிட்டார்கள்.

இதேபோல் டட்லி சேனாநாயகாவும் தமிழ் பிரச்சினை தீர பிரேரணை ஒன்றைக் கொண்டுவர முயன்றார். இதனையும் பிக்குகள் குழப்பிவிட்டார்கள்.

இவ்வாறு ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கமும் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வைத் தர முன்வரவில்லை. அதன் எதிரொலியே இன்றைய பூதாகரமான பிரச்சினையை உருவாக்கியுள்ளது.

அரசாங்கத்தால் பிரச்சினைக்குத் தீர்வு காண தெரிவுக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை யாவது நாம் சரியாகப் பயன்படுத்தி திர்க்கப்படாத இப்பிரச்சினைக்கு முடிவுகாண வேண்டும். அதனைவிட்டு புத்திசாலித்தனமில்லாமல் குழப்ப முயலக்கூடாது.

### சிரந்திரிய தேரோ

சிரந்திரிய பஞ்ஞாசேகர தேரோ விளக்கம் அளிக்கையில் கூறியதாவது:-

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தால் கடந்த பத்து வருடங்களாக தெற்கிலுள்ள சிங்கள மக்களும் வட-கிழக்கு தமிழ் மக்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

மேற்படி சட்டத்தால் மக்கள் வீணாக கொல்லப்பட்டார்களே தவிர நன்மை எதுவும் விளையவில்லை.

ஆனால், அக்திகள் கொழும்புக்கும் இந்தியாவுக்கும் சென்றதே மீதியாகும்,

யுத்த செலவு காரணமாக வாழ்க்கைச் செலவு அதிகரித்ததும் ஒருவிளைவாகும். இவ் வாழ்க்கைச் செலவு மேலும் ..யரவிருக்கிறது.

தென்னிலங்கை மக்கள் மத்தியில் இப்போது நடக்கும் யுத்தம் பற்றி தெளிவான விளக்கம் எதுவும் இல்லை. சிலர் எதிர்க்கிறார்கள். சிலர் ஆதரிக்கிறார்கள்.

யுத்தம் பற்றிய சரியான விளக்கத்தை மக்கள் மத்தியில் பரப்பி மக்களை யதார்த்தத்தை புரியவைக்க வேண்டும்.

பொதுவாக எல்லா மக்களும் அமைதியாக வாழவே விரும்புகிறார்கள்."

மேற்படி மாநாட்டில் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி முத்தையா மேலும் பல தென் பகுதி பிக்குகள் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

வீரகேசரி (10.01.1991)

## நன்றி:

- வீரகேசரி (இலங்கை)
- தேடல் (கனடா)
- புதிய கலாச்சாரம் (இந்தியா)
- சுவடுகள் (நோர்வே)
- தோழமை (இந்தியா)
- புதிய ஜனநாயகக்கட்சி (இலங்கை)
- மீட்சி புக்ஸ் (இந்தியா)

www.tamilarangam.net

# ஐக்கியத்திற்க்காக போராடுவோம் போராடுவதற்காக ஐக்கியப்படுவோம்

*நெப்போலியன்*

இன்றைய எமது இனப் பிரச்சினைக்கு பின்னனியில் எம் மத்தியில் தூவப்பட்ட இனத்து வேஷத்தை முக்கிய காரணமாகக் கூறலாம். தமிழர் கட்சிகளும் சரி, 1970களில் தமிழீழ கோஷத்தை எழுப்பிய தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சரி இன விதையைத் தூண்டுவதில் முக்கிய பங்கு வகித்தனர். இதே போன்றே சிங்களக் கட்சிகளும். 1977ல் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தமிழ் மக்களின் எதிரியாக சிங்கள மக்களை அறிமுகப் படுத்தினர். 1956ல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதன் பின்னர் வந்த ஆளும் கட்சிகள் அனைத்தும் இதனையே செய்தனர். இதன் விளைவால் இரு இன மக்கள் மத்தியிலும் பகை மூண்டது. தற்பொழுது இவ்வாறே முஸ்லீம் மக்களும் அறிமுகப படுத்தப்படுகின்றனர்.

உண்மையிலேயே எமது எதிரி யார்? தமிழ், சிங்கள, முஸ்லீம் முதலாளி வர்க்கம். இவர்கள் அடையாளம் காட்டப்படுவதற்கு பதிலாக எமக்கு அறிமுகப்படுத்தப் பட்டவர்கள் சிங்கள மக்கள். வர்த்தக போட்டி, பொருளாதார நெருக்கடி, வேலையில்லாப் பிரச்சினை என்பனவே எமது பிரச்சினை களுக்கான முக்கிய காரணங்களாகும். இதைவிட 1900ன் ஆரம்ப கால கட்டத்தில் தொடர்ந்த தொழிலாள வர்க்க போராட்டங்கள் பிரித்தானிய அரசாங்கத்தை நிலைகுலையச் செய்தன. குறிப்பாக தமிழ், சிங்கள, முஸ்லீம், இந்திய தொழிலாளர்களுக்கிடையேயான ஒற்றுமை அவர்களை ஆட்டம் காண வைத்தது.

இத்தொழிலாளர்களுக்கிடையே யான ஒற்றுமையை உடைக்கவே பிரித்தானியரின் பின் ஆட்சிக்கு வந்த ஆளும் கட்சிகள் முயன்றன. குறிப்பாக 1970ல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டு முன்னணி ஆட்சியில் இலங்கை வங்கி ஊழியர்கள் தொடர்ந்து 40 நாட்களுக்கு மேலாக வேலைநிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டனர்.

சிங்களத் தொழிலாளர், தமிழ், முஸ்லீம் தொழிலாளிகள் மத்தியில் நிலவிய நாற்பது வருட வர்க்க ஒருமைப்பாடு முனைப்பாக காட்டப் படவும், நினைவு கூரப்படவும் வேண்டும். தொழிலாளர் இயக்கம் பொய்மை உணர்வுடனும் இனப் பற்றுடனும் திசை திருப்பப்படும் இன்றைய காலகட்டத்தில் பல வேலைநிறுத்தங்களை தொடர்ச்சியாக செய்து முதலாளித்துவ, காலனித்துவ அரசுகளுக்கு எதிராக ஒரே வர்க்கமாக நின்று செயற்பட்ட அன்றைய காலகட்டம் நினைவு கூரப்பட வேண்டும்.

1929ம் ஆண்டில் நடைபெற்ற "ட்ராம்" வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறிப்பிடத்தக்கது. இத்தொழிலாளர் "பௌரஸ்ட் சகோதரர்கள்" என்னும் கம்பனியில் வேலை பார்த்து வந்தனர். இவர்களுக்கு ஆதரவாக துறைமுகத் தொழிலாளர் இக்கம்பனியின் பொருட்களை ஏற்றவோ இறக்கவோ மறுத்தனர். மொத்தமாக 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். 950 பேர் காயமடைந்தனர். இதுபற்றி பிலிப் குணவர்த்தன குறிப்பிடுகையில் "சீரழிந்த முதலாளித்துவ சமூகத்தில் அதிகாரத்தை வெளியேற்ற முடிந்தது" எனக் குறிப்பிட்டார்.

தொழிலாள வர்க்கத்தின் ஒற்றுமையும் அதன் விளைவுகளும் எவ்வாறு இருந்தது என்று சற்று திரும்பிப் பார்ப்போமாயின் எமது எதிரி யார் என்பதை நாம் அடையாளம் காண்போம்.

பிரித்தானியர் எமது நாட்டை எம்மிடம் விட்டுச் சென்ற பொழுது பிரித்தாளும் கொள்கையையும் விட்டுச் சென்றார்கள். சிறுபான்மையினருக்கு கூடுதலான கல்வியை அளித்து நிர்வாக வேலைகளில் அமர்த்தினார்கள். உதாரணமாக யாழ் ஒரு சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவில் 12 பாடசாலைகள் உள்ளன.

தேசிய பயிர்களுக்கு பதிலாக பணப்பயிரை பயிரிட்டார்கள். உ+ம் தேயிலை, இறப்பர், கொக்கோ என்பன. இவற்றை வெளிநாடுகளில் விற்று அப்பணத்தை தம் நாட்டிற்கு கொண்டு சென்றார்கள். இவற்றில் குறைந்த வேதனங்களுக்கு வேலை செய்வதற்கென இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை குடியமர்த்தினார்கள். இவர்களின் வாழ்க்கைத்தரம் இன்னமும் இவ்வாறே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது மாத்திரமல்ல கலாச்சார, மத ரீதியான மாற்றங்களை செய்து எம் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தினார்கள். ஏர் பிடித்த கைகள் பேனா பிடிக்கத் தொடங்கியது இக்காலத்திலேயே.

இரு இனங்களுக்கிடையில் திட்டமிட்ட முறையில் பகைமையை உருவாக்கினார்கள். உதாரணமாக 1875 1900 கால கட்டத்தில் பிரித்தானிய, வட தென்னிந்திய முதலீடுகள் இலங்கையின் காலனித்துவ பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தின. உண்மையில் இலங்கைத் தமிழரும், சிங்களவரும், பிரித்தானியர் முஸ்லீம்களுடன் போட்டி போடக் கூடிய வகையில் இருக்கவில்லை. உள்நாட்டு வர்த்தகத்தில் புறக்கோட்டை அரிசி, புடவை வியாபாரத்தின் பெரும்பகுதி 73 நாட்டுக் கோட்டைச் செட்டிக் கம்பனிகளில் தங்கியிருந்தது. பல சரக்கு விற்பனையில் 35 முஸ்லீம் கம்பனிகள் பங்குபற்றின. இவ்வருடத்தில் தமிழ் அல்லது சிங்களக் கம்பனிகள் ஒன்றுமில்லை. 1880ல் 86 செட்டிக் கம்பனிகளும், 64 முஸ்லீம் கம்பனிகளும் முதன்மை பெற்றன. 1890ல் குஜாரத்தைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சேர்ந்த புதிய முஸ்லீம் வர்த்தகக் கம்பனிகள் போரா, கோவுா, பேமன் போன்றோர் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் இடம் பெற்றனர். இவர்களை புதிய வியாபார முக்கியஸ்தர்களாக மாறி பிரித்தானியர்களின் கூட்டு பங்கு தாரர்களாகவும் அமைந்தனர்.

இதன் விளைவே 1915ல் சிங்கள முஸ்லீம் கலவரம் ஏற்பட்டது. 1929 க்கும் 1932க்கும் இடையில் ஏரிக் கரையகம் (Lake House – 1929) கண்டி குயின்ஸ் ஹோட்டல் (1931) நடைபெற்ற வேலைநிறுத்தங்களில் வேலை நிறுத்தம் செய்வோருக்கு பதிலாக மலையாளிகளை வேலைக்க மர்த்தினர். இதனால் இலங்கையில் பிரித்தானியர்களால் குடியமர்த தப்பட்ட மலையாளிகளுக்கும், சிங்களவருக்குமிடையில் பகை மூண்டது.

1930களில்ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் பல தேயிலை இறப்பர்த் தோட்டங்கள் மூடப்பட்டன. இதனால் ஏற்பட்ட வேலையில்லாத் திண்டாட்டம் இனவெறியாக மாறியது. இந்தியர்கள் குடியேறியமையால் தம் வேலைகள் பறிபோயின என்ற மாயை வளர்க்கப் பட்டது. (இதே போன்ற ஓர் நிலைமைதான் தற்பொழுது கனடா விலும். உண்மையில் நாங்கள் இங்கு அகதிகளாக வந்தமையால்தான் பல தொழிற சாலைகள் மூடப்பட்டு பலர் வேலையிழந்துள்ளார்களா? அல்லது அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கையில் ஏற்பட்ட மாற்றமா?)

1896, 1930ம் ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட பல வேலை நிறுத்தங்கள் பிரித்தானிய அரசிற்கு ஓர் உதாரணமாக அமைந்தது. சலவைத் தொழிலாளர் (1896), யாழ் சுருட்டுத் தொழிலாளர் (1886), 'Times of Ceylon அச்சகத் தொழிலாளர் (1898), துறைமுகத் தொழிலாளர் (1901), கொழும்பு மாட்டு வண்டிக்காரர்கள் (1905), ரயில் வேலை நிறுத்தம் (1912), துறைமுகத் தொழிலாளர் (1920), முதலாவது பொது வேலை நிறுத்தம் (1923), இரண்டாவது பொது வேலை நிறுத்தம் (1933), டிராம் வண்டி வேலை நிறுத்தம் (1929), குறிப்பாக 1927ம் ஆண்டு துறைமுக வேலை நிறுத்தம் 3 வாரங்களாக 13,000 தொழிலாளர்கள் வேலைக்கு செல்லவில்லை.

மேற்குறிப்பிட்ட வேலைநிறுத்தங்கள் யாவும் தொழிலாளர்களு (தமிழ்,சிங்கள, முஸ்லீம்) க்கிடையே ஏற்பட்ட ஒற்றுமையின் விளைவே. இதனை உடைப்பதே பிரித்தானியரின் முதல் வேலையாகவும் இருந்தது.

சுதந்திரத்திற்குப் பின்னர் 60 களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகள் பொருட்களின் விலையை பெருமளவு உயர்த்தியது. இதே போன்று 1968 ம் ஆண்டு சர்வதேச நாணய நிதியத்தின் வற்புறுத்தலால் அரிசி மானியம் குறைக்கப்பட்டு ரூபாய் மதிப்பும் குறைக்கப்பட்டது. இதனால் விலைகள் உயர்ச்சியடைந்தன."

சிறுபான்மை இனங்களுக்கிடையிலான முரணபாடுகளுக்கு பின்வரும் காரணங்களை கூறலாம்.

(1) 1977ம் ஆண்டு தொடக்கம் வேகமடைந்த திறந்த பொருளாதாரக் கொள்கையால் சிங்கள, தமிழ், முஸ்லீம் வாணிப முதலீடுகள், கைத்தொழிலாளர்,பெருந்தொழில்கள் ஆகியவற்றிற்கிடையே ஏற்பட்ட போட்டிகள்.

(2)சிங்கள, தமிழ் உத்தியோகதர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி.

(3) சகல இனங்களையும் சார்ந்த சிறு தொழில் செய்வோர், கடைக்காரர், குட்டி வியாபாரிகளுக்கிடையே ஏற்பட்ட போட்டி.

(4) குறைவாக உள்ள அரசாங்க வேலைகளுக்கு சிங்கள தமிழர்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி.

(5) பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் என்பனவற்றில் நுழைவதற்கான தீவிரப் போட்டி.

(6) பணவீக்கம், வேலையின்மை, வியாபாரப் போட்டிகள் என்பன குறிப்பிடத்தக்கன.

இவ்வாறு வளர்க்கப்பட்டுள்ள இன வெறியை காரணம் காட்டி சிங்கள தமிழ் உழைக்கும் மக்களின் ஒற்றுமை சாத்தியமில்லை என்ற கூற்று எவ் அடிப்படையில் தோன்றியது?

இம் முரண்பாட்டின் ஆரம்பத் தோற்றுவாய்களான வாக்குரிமை பறிப்பு, தனிச் சிங்களச் சட்டம் போன்றவை ஏன் கொண்டு வரப்பட்டவை?

இலங்கை காலனித்துவ அமைப்பிலிருந்து விடுதலை அடைந்த ஆரம்பக் கால கட்டங்களில் மலையக மக்களின் வர்க்க நிலை காரணமாக அவர்களின் வாக்குரிமையினால் 10க்கும் மேற்பட்ட இடதுசாரி உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்குத் தெரிவாயினர். அத்தோடு முழு இலங்கையிலும் இருந்து மொத்த பாராளுமன்ற உறுப்பினர்களில் 40% ஆனோர் இடது சாரிகளே தெரிவாயினர். இதனாலேயே மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. மேலும் மலையாளித் தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர், இந்திய வர்த்தகர்கள் போன்றவர்களுக்கு எதிரான தேசியவாதக் கோஷம் சிங்கள முதலாளித்துவ வாதிகளால் எழுப்பப்பட்டது. முதலாளித்துவ நிர்வாக அமைப்பு தன்னைப் பாதுகாப்பதற்கும், தன் சுரண்டலுக்கு ஏற்றவாறும் மக்களிடையே பல வீனங்களான தேசிய, மத, சாதிய வேறுபாடுகளைத் தோற்றுவிக்கிறது. இவ்வகையான மக்களிடையே உள்ள உண்மையற்ற முரண்பாடுகளை வளர்ப்பதனால் உண்மையான வேறுபாடான வர்க்க வித்தியாசத்தை அரசு மறைக்கின்றது. எனவே இன முரண்பாட்டின் அளவானது அதாவது இனவாதம் அதன் ஆரம்பக் கட்டத்தில் உள்ளதா? அல்லது வளர்த்து வெறியூட்டப்பட்டுள்ளதா? என்கின்ற நிலைமைகள் 'உண்மையான மக்கள் விடுதலையின்' நோக்கும் வேலைத் திட்டத்தின் அடிப்படைக்கருத்தியலை மாற்றுது. எந்த அளவில் உள்ள இனவாதமாயினும் அது உடைக்கப்படல் வேண்டும். இதற்கு மிகவும் அவசியமானது பொது எதிரியை இனங் காட்டல் ஆகும்.

உதாரணமாக இலங்கையில் இந்திய இராணுவம் நிலை கொண்ட காலங்களில் சிங்கள முதலாளித்துவ அரசுக்கும் சரி தமிழ்ப் பூர்சுவா விடுதலை அமைப்புகளுக்கும் சரி பொது எதிரி பிராந்திய ஆதிக்க வாதியாக இந்தியா தோற்றமளித்தது. அவ்வகையான பிரச்சாரத்தையே மக்களிடமும் கொடுத்தார்கள். இதன் மூலம் சிங்கள, தமிழ் மக்களிடையே பகைமை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வு, முற்றாக விடுபடா விட்டாலும் வெறித்தனமான மோதல்கள் தவிர்க்கப் பட்டிருந்தன.

வாழ்வில் பல பிரச்சினைகளை எதிர் கொள்ளும் மக்களுக்கு யாரை எதிரியாக இனங்காட்டப் படுகின்றார்களோ அவர்கள் மீதே எதிர்ப்புணர்வு ஏற்படும். சிங்கள, தமிழ் உழைக்கும் மக்களை ஒருவருக்கு ஒருவரை எதிரியாக்கிக் காட்டி ஏமாற்றித் தொடர்ந்தும் மோதவிட்டு அதன் மூலம் நாட்டைப் பிரித்து பின்னர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது என்பது பரிசீலிக்க வேண்டியதாகும்.

மற்றும் சமுத்திரனின் கட்டுரையின் சில பகுதிகளைப் பார்ப்பின் அவர் கூறுகின்றார்

(1) "ஒரு இனத்தை ஒடுக்கும் பிறிதோர் இனமும் தனது சுதந்திரத்தை இழந்து விடுகின்றது. தமிழ் மக்களைக் கொடுமையாக ஒடுக்கும் ஒரு அரசினால், சிங்கள மக்களையும் அடக்காமல் இருக்க முடியாது. தமிழ் மக்களின் உரிமைகளை மறுக்கும் ஓர் அரசினால் இறுதியில் சிங்கள மக்களையும் திருப்திப் படுத்த முடியாது. இன்று ஒடுக்குமுறைக்கு உள்ளாகிப் போராடும் தமிழ் மக்கள், நாளை போராடும் சிங்கள மக்களின் உடனடி நண்பர்கள் என்பதை திரைபோட்டு மறைத்துள்ளது."

(2) "அரசியல் நேர்மையும், புரட்சிகர சிந்தனையும் கொண்ட சகல சிங்களவர்களும் தமிழ் மக்களின் மத்தியில் உருவாகி வரும் தேசிய விடுதலை இயக்கத்தை ஆதரிக்காமல் இருக்க முடியாது"

(3) வரலாற்றுச் சூழ்நிலைகளால் தமிழ் மக்களிடையே ஜனநாயக உரிமைப் போராட்டம் ஏகாதிபத்திய எதிர்ப்பினையும், முற்போக்கு சிந்தனையையும் தொடர்ச்சியாக உள்வாரிப் படுத்தி வருகின்றது. இன்றைய அரசின் நடைமுறை அதன் சர்வதேச உறவுகள் தமிழர்களின் போராட்டத்தை மேலும் மேலும் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை கொண்டதாக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

(4) சிங்கள முற்போக்காளர்கள் இதன் காரணத்தால் பெரும் தேசிய இனவாதத்தை எதிர்த்துப் போராட மேலும் சக்தி பெறுவார்கள். ஒவ்வொரு சிங்களச் சகோதரனின் ஜனநாயக உணர்வினை மனிதத்துவத்தினைப் பரீட்சிக்கும் போராட்டம் அமைந்துள்ளது. சிங்கள மக்கள் பெரும் தொகையில் இந்தப் பரீட்சையிலுந் தேர்வு பெறும் காலம் அவர்களினதும் தமிழ் மக்களினதும் விடுதலையின் வருகையினைப் பறைசாற்றும்.

மேற்கூறிய நாலு பகுதிகளுமே அவரின் கருத்துக்களில் முரண்பட்டவையாக காணப்படுகின்றன. மேற்கூறியவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்பின் அவற்றின் உண்மை நிலையினை அறிய முடியும்.

முதலாவது பகுதியில் கூறிய கருத்து சிங்கள மக்களும் சிங்கள இனவாத முதலாளித்துவ அரசினால் அடக்கப்படுகின்றார்கள் என்றும் இனவாதத்தினால் திரைபோட்டு மறைக்கப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றார். இக்கூற்றின் படி பார்த்தால் உண்மையாக ஏமாற்றப்பட்டு அடக்கப்படும் மக்களின் விடுதலையினையும் சேர்த்து எவ்வித வேலைத்திட்டமும் எந்த இயக்கத்தாலும் இது வரையும் வைக்கப்படாமல் இனவாதத்தினை எவ்வாறு ஒழிக்க முடியும்.

மற்றும் எம் தமிழ் மக்களிடையே உள்ள பிரிந்து போதல் என்னும் பதம் பிற்போக்குத் தனமான தேசியக் கலாச்சார வாதத்தினையே வளர்க்கின்றது, தாமே உயர்வான தமிழர் என்றும் வக்கிர உணர்வினை தோற்றுவிக்கின்றது. இந்த நிலைப்பாடு பாட்டாளி வர்க்க கலாச்சாரத் தேவையினை நோக்கி நிற்கும் உழைக்கும் தமிழ் பேசும் மக்களின் உணர்வினை மாற்றி தேசிய முதலாளித்துவவாதத்தை நோக்கித் திசை திருப்பும், இவ்வாறான வெளிப்பாடே மலையக முஸ்லீம் மக்களைத் தாழ்வாகவும், அவர்களின் அரசியல், வாழ் நிலைத் தேவைகளை உணராமலும் பெரும்பான்மைத் தமிழர்களால் ஒதுக்கப்படும் மனோநிலையினைத் தோற்றுவிக்கின்றது. இவ்வகையான வெளிப்பாடுகளில் சிலவே சாதி ரீதியாகவும், பிரதேச ரீதியாக மன்னார், வன்னி, கிழக்கு என்றும் மக்களைப் பிரிக்கின்றது. நாம் எல்லோருமே ஒடுக்கப்படும் இனம் என்றும் உன்னதமான பாட்டாளி வர்க்க சுபாவம் தமிழ் பேசும் மக்களிடையே ஓட்டு மொத்த வடிவமாக தோன்றாமைக்கான காரணம் என்ன?

தமிழ் மக்களிடையே முதலாளித்துவ தேசியவாதமே புரையோடியுள்ளது.

*சமுத்திரனின் சமீபத்திய கட்டுரை அ.ஆ.இ. வில் (நெதர்லாந்திலிருந்து வெளிவரும் சஞ்சிகை) வெளிவந்துள்ளது. அதல் அவரே கூறியுள்ளார். "தமிழ்த் தேசிய வாதம் தனது எதிரியான சிங்களத் தேசிய வாதத்தின் பிம்பம் போன்று சீரழிந்துள்ளது என நான் கருதுகின்றேன்" என்றும் பிறதொரு பகுதியில், "தமிழ் தேசிய வாதத்தின் அதி உயர்ந்த மேலாதிக்கத் தன்மையானது இனவாத பிற்போக்கு சிங்களத் தேசிய வாதத்தினைப் போன்றதாகும்" என்றும் கூறுகின்றார். இக்கருத்துகளும் இவரின் முன்னைய கருத்துக்களுடன் முரண்பட்டவையாக உள்ளன.*

மற்றும் அரசக்கெதிரான போராட்டம் என்பது முதலாளித்தவ அழிவுக்கானதாகும். ஆனால் எமது தேசிய விடுதலைப் போராட்டம் அதனை உருவாக்க வழிசெய்யாது. எனவே "இன்று விடுதலையாகும் தமிழர்கள் நாளை போராடும் சிங்களவர்களுக்கு உடனடி நண்பர்கள்" என்றும் சமுத்திரனின் கூற்று எவ்வாறு சாத்தியமானது. எமது இன்றைய தேசிய விடுதலையினை பிரதிநிதித்துவப் படுத்துவது முதலாளித்துவத் தன்மை மிக்க குறுந் தேசிய வாதமே!

மேலும் இரண்டாவது பகுதியினைப் பார்த்தால் புரட்சிகர கருத்துகளை உடைய சிங்கள சக்திகள் தமிழ் தேசிய இயக்கத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது என்பதே! தமிழ்த தேசிய இனத்தினுள் புரட்சிகர சக்திகள் புரட்சிகரமான சக்திகள் தங்களை வெளிப்படுத்தி வேலை செய்ய முடியாமைக்குக் காரணம் குறுந் தேசிய முதலாளித்துவ அமைப்புகள் என்பது வெளிப்படை. அதே போன்றே சிங்கள புரட்சிகர சக்திகளுக்கு சிங்கள முதலாளித்துவம் தடையாக உள்ளது. இருந்த போதிலும் யாழ் பல்கலைக் கழக மனித உரிமைகள் குழுவின்

www.tamilarangam.net

அறிக்கையில் "தமிழ் மக்களிடையே முற்போக்கான சக்திகள் வெளிப்பட முடியாத இன்றைய நிலையில் தென்பகுதியில் பல முற்போக்கு சிந்தனை கொண்ட சக்திகள், பத்திரிகைகள் என்பன வற்றைக் காணக்கூடியதாக உள்ளன." என்று தெரிவிக்கின்றது. மேலும் ஒட்டு மொத்தமாக ஒரு சமூகத்தினுள் முற்போக்கான புரட்சிகர சக்திகள் இல்லை என்று எண்ணுவது முதலாளித்துவ தன்மை மிக்கதாகும்.

அடக்கப்படும் ஒரு சமூகமாகிய சிங்கள இனத்தினுள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ புரட்சிகர சக்திகள் உருவாகவில்லை என்பது இயங்கியல்புக்கு எதிரான பிற் போக்குக் கருத்தாகும். மற்றும், சிங்கள புரட்சிகர சக்திகள் ஆதரிக்கக் கூடிய அளவிற்கு தமிழ்ப் பூர்சுவா விடுதலை அமைப்புகளும், பிற் போக்குத்தனமான கட்டமைப்பிலேயே பிரிவது என்ற கோரிக்கையும் புரட்சிகரமானதா என்பது மறுபரிசீலனைக்குரியதாகும். மேலும் உண்மையான புரட்சிகர சிங்கள சக்திகளுடன் எந்த அளவிற்கு தமிழ் தேசிய விடுதலை அமைப்புகள் தொடர்பினை ஏற்படுத்தின என்பதும் கேள்விக் குரியதே! மற்றும் மூன்றுவது பகுதியினைப் பார்க்கும்போது தமிழ்த் தேசிய விடுதலை அமைப்புகள் வரலாற்றுச் சூழ்நிலைகளால் ஏகாதிபத்திய எதிர்ப்பையும் முற்போக்குச் சிந்தனைகளையும் உள்வாரிப்படுத்தி வருகின்றது என்ற கருத்து எமது விடுதலை அமைப்புகள் அமெரிக்க, ரஷ்ய ஏகாதிபத்தியங்கள் பற்றிய நிலைப்பாட்டையும், மொசாட், றோ போன்றவற்றின் தொடர்புகளை பற்றியும் மீண்டும் ஆராய்ந்தால் உண்மை புரியும்.

நான்காவது பகுதிக்கான கருத்தினைப் பார்ப்பின் எந்த ஒரு பகுதி மக்களையும் போராட்டத்திற்கு அணிதிரட்டப்படும் வேளையில் அவர்களின் சொந்தக் கோரிக்கையினை உள்ளடக்கினுல் மட்டுமே ஆதரவு பெறமுடியும். இது தவிர்க்கவியலாத ஒன்று. உதாரணமாக பாரிய தொழிலாளரின் போராட்டங்களில் கூட விவசாயிகள் பங்களிப்பு இருப்பதில்லை. ஒட்டு மொத்தமான உழைக்கும் மக்களின் கோரிக்கைகளின் போதே; தொழிலாளர், விவசாயிகள், ஊழியர்கள் போன்றோரின் பங்களிப்பு காணப்படும். இதே போன்று சிங்கள உழைக்கும் மக்களிற்குமான கோரிக்கை அற்ற போராட்டத்தில் அவர்களின் பங்கினை எதிர்பார்ப்பது நடைமுறை சாத்தியமற்றது. மேலும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இரண்டு வகைப்பட்ட தன்மைகள் உண்டு.

1. தேசிய முதலாளித்துவத்தின் தேவைகளைச் சார்ந்திருத்தல்.

2. பாட்டாளி வர்க்கமான உழைக்கும் பெரும்பான்மையின் நலனைச் சார்ந்திருத்தல்.

தேசிய முதலாளித்துவக் கோரிக்கையின் தன்மைகள்

அ. தனது இனத்திற்கு விசேட உரிமைகள், அந்தஸ்துகள் தேவை என்ற ரீதியிலேயே இனப் பிரச்சினையை அணுகுகின்றது.

ஆ. பிற தேசிய இனங்களின் நிலை எதுவாயினும் தன் தேசிய நலனிற்கே உத்தரவாதம் தேடுகின்றது.

இ. பாட்டாளி வர்க்கத்திற்கு எதிராக மற்றத் தேசிய இனங்களின் முதலாளித்துவத்துடன் உடன்பாட்டுக்கு வருகின்றது.

ஈ. வர்க்கப் போராட்டத்தை பின் தள்ளி இனப் பிரச்சினையை கூர்மைப் படுத்துகின்றது.

பாட்டாளி வர்க்கத்தின் தேசிய கோரிக்கை அதிலிருந்து வேறுபட்டதாகும்.

அ. தேசியப் போராட்டத்தில் தேசிய முதலாளித்துவத்துடன் சேர்ந்து ஆதரவு வழங்கும்.

ஆ. அதே சமயம் ஒடுக்கப்படும் இனத்திற்கென விசேட உரிமைகள் கோருவதை எதிர்க்கும்.

இ. ஒரு நாட்டில் உள்ள எல்லாத் தேசிய இனங்களிற்குமான சுயநிர்ணயக் கோரிக்கைக்காகப் போராடும்.

ஈ. சுயநிர்ணய உரிமை கோரும் அதேவேளை பாட்டாளிகளின் ஐக்கியத்தினையும் வலியுறுத்தும்.

உ. பிரிவினையோ, சுயநிர்ணய உரிமையோ அல்லது இனப் பிரச்சினைக்கான எந்தத் தீர்வையும் பாட்டாளி வர்க்க நலனின் பக்கமிருந்தே நோக்கும்.

ஊ. தேசியம், முதலாளித்துவத்துடன் தோன்றி முதலாளித்துவத்தின் முடிவிலேயே முடியும். எனவே பாட்டாளி வர்க்கம் இனவாதத்தினை ஒழிக்க வேலை செய்யும்.

பாட்டாளிகளின் தேசியக் கோரிக்கைக்கான விடுதலை அமைப்புகளோ அல்லது அகச் சமுதாயச் சூழலோ எம்மிடம் இதுவரை பெரிய அளவில் இல்லை. எனவே முதலாளித்துவ அமைப்பிலேயே பிரிவது எவ்வகையானது? இதனை விரும்புவர்கள் ஐரோப்பிய இனங்களின் சுதந்திரமான தேசிய முதலாளித்துவ வளர்ச்சியினை உதாரணம் காட்டுகின்றனர். அதே நேரம் வேறொன்றையும் மனதில் கொள்ளல் வேண்டும். ஐரோப்பிய இனங்களின் தேசிய முதலாளித்துவ வளர்ச்சி நடந்த அதேவேளை ஐரோப்பிய தேசிய முதலாளித்துவம் அடைந்த நன்மையைப் போன்று 10 மடங்கு அவலங்களையும்; சுரண்டல்களையும் நவ காலனித்துவ முறை மூலம் 3ம் மண்டல நாடுகளுக்கு வழங்கின இதுவும் ஐரோப்பிய தேசிய முதலாளித்தவ வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தது. இம்முறையை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள் வோமானுல் நாம் எப்படி சோச லிசத்தை ஆதரிக்க முடியும். இதுவே மற்றைய தேசிய இனங்களினைச் சுரண்டுவதை அங்கீகரிக்கின்ற தல்வா?

மற்றும் பிரிவினைக் கோரிக்கை முதலாளித்துவத் தன்மையிலேயே தமிழ்ச் சக்திகளிடம் உள்ளதால், ஓர் உண்மை வெளிப்படை! அதாவது முஸ்லீம் மக்களை அணிதிரட்ட முடியாமையும், மலையக மக்களிடம் காலூன்ற முடியாமையும் ஆகும். மலையக, முஸ்லீம் மக்களின் வாழ்நிலைத் தேவைகளை அரசியல்த் தேவைகளை கணக்கில் கொள்ளாததால் அவர்களை தேசிய இனமாகத் திட்டவட்டமாக கூறுமல் தனித்துவம், மதக் கலாச்சாரம் என்று மழுப்பி வந்தனர். அண்மைக் காலத்திற்கு முன்பு வரையும் இவர்களையும் தமிழ் பேசும் தேசிய

www.tamilarangam.net

இனமாக ஒரே வேலைத் திட்டத்தினையே கொண்டிருந்தனர். இனியும் மாற்றுவார்களோ தெரிய வில்லை. சோசலிசத் தமிழீழம் அமைக்க எண்ணும் அமைப்புகளும் இக்கருத்தையே கொண்டிருந்தன.

மேலும் மலையக முஸ்லீம் இனங்களை அந்நியர்களாக்கி அவர்களின் தேவை பற்றி தமக்கு அக்கறையில்லை என்று தமது தேசிய நலனை மேலும் முதலாளித்துவத் தன்மையுடன் குறுக்கிக் கொண்ட னர். இதனை சமுத்திரனே கூறுகின்றார் "முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமை மீதான அபிலாசை மீது எவ்வாறு பழைய தமிழ் தேசியத் தலைமை ஓர் புத்திசாலித்தனமற்ற போக்கை கொண்டிந்ததோ அதே போக்கினை சில தமிழ்க் குழுக்கள் பெற்றுள்ளன" மேற்படித் தன்மைகள் தமிழ் தேசிய விடுதலை அமைப்புகள் தங்களின் கோரிக்கையானது முழுதான முதலாளித்துவ தேசியக் கோரிக்கை யாகவே இனங்காட்டியுள்ளன.

இவர்கள் பாட்டாளி வர்க்கக் கோரிக்கையான சக தேசிய இனங்களுக்குமான சுயநிர்ணய உரிமை கோசத்தினை முன்வைக்கவில்லை. தேசிய இனங்களுக்கான வரை யறைகளில் அரசியல், பொருளாதார வாழ்வு என்பதும், வாழும் பிரதேசம் என்பதும் வட கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களிடம் இருந்து மலையக மக்கள் முற்றாக வேறுபடுவதால் அவர்கள் முற்றாகத் தேசிய இனமே! ஆனால் இன்னமும் இது சில தமிழ்க் குழுக்களால் அங்கீகரிக்கப்படவில்லை.

சிங்கள முஸ்லீம் மக்களை நேரடி எதிரியாக்கிய தனி நாட்டு கோரிக்கையும் தேசிய வாதமும் இலங்கை அரசு தொடர்ந்து நிலைப்பதற்குச் சார்பான நிலைகளை உருவாக்குகின்றது. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் அரசு பாதுகாப்பிற்கான இராணுவ ஆட்சேர்ப்பு, தமிழ் பிரதேசங்களில் பௌத்த மத மேலாதிக்க ஊடுருவல் போன்றவற்றிற்கு உணர்வு பூர்வமாக சிங்கள மக்களின் ஆதரவினைப் பெறுகின்றது.

மற்றும் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கும் விடுதலை அமைப்புகள் தேசிய விடுதலை தீர்வாக பிரிவினைக்காகப் போராடும் அதே நேரம் சோசலிசத்திற்கான கூட்டுமொனமாகிய கலாச்சார மாற்றங்களுக்கு எந்த வகையில் பங்காற்றினர்? உதாரணமாக கடற் தொழிலாளர், விவசாயிகள், சிறுகைத் தொழிலாளர் ஆகியோரின் நிலைபற்றி தீர்க்கமான ஆய்வு எதுவும் முன் வைக்கவில்லை. மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களாகிய சிறுபான்மைத் தமிழர் மீதான அடக்குமுறை பற்றியோ அதற்கான தீர்வுக்கான வேலைத் திட்டமோ தீர்க்கமோ எதுவும் இல்லை.

இவர்களால் எவ்வாறு சோசலிசக் கட்டுமானத்திற்கு உழைக்க முடியும். தேசிய விடுதலையில் கூட எவ்வளவு உளப்பூர்வமாக ஈடுபடுவார்கள் என்பது கேள்வி ?

1987ம் ஆண்டு சிங்களக் கவிஞரான ஐயவிருதாகு என்பவரால் எழுதப்பட்ட கவிதை

**பனையும் தென்னையும்**

*தென்னை மரமொன்று*
*பனை மரத்தின் மீது*
*சரிந்து விழுந்தது*
*பனை மரத்தின் கழுத்து முறிந்ததது.*
*"நான் அவனுடைய கழுத்தை முறித்துவிட்டேன்."*
*ஆணவமாகப் பேசி*
*திரும்பிப் பார்த்த பொழுது*
*தான் பூமியிலிருந்து பிடுங்கப்பட்டிருப்பது*
*தென்னை மரத்துக்கு தெரிந்தது.*

**ஐக்கியத்திற்காக போராடுவோம்.**
**போராடுவதற்காக ஐக்கியப்படுவோம்.**

தேடல் (இல.9)

உங்களுடன்....

வணக்கம். ஒரு பரீட்சார்த்த முயற்சியாக "இரவல் தூண்டில்" போட ஆரம்பித்திருக்கிறோம். எல்லோருக்கும் எல்லாச் சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் வாசிக்கச் சந்தர்ப்பம்/வசதிகள் கிடைக்காமலிருக்கும். எனவே எம்மாலியன்றவரை கருத்துகளைப் பரவலாக்கும் முயற்சியில் வேறு சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவந்த ஆக்கங்களே "இரவல் தூண்டில்"இல் மறுபிசுரமாகின்றன. "இரவல் தூண்டில்"இல் பிரசுரமாகும் கருத்துகளுடன் அவற்றைத் தொகுத்த எமக்கு முழு உடன்பாடு இருக்கவேண்டுமென்பதில்லை. பிரசுரமானவை தொடர்பான உங்கள் கருத்துகளும் பிரசுரமாகும். அபிப்பிராயங்களை அறியத் தாருங்கள்.

"இரவல் தூண்டில்" இரு மாதங்களுக்கொருமுறை வெளியாகும்.

– கடலோடிகள்

மார்ச்-ஏப்ரல் மாதத்

## தூண்டிலில்....

* சப்தமில்லையேல் சம்பவமில்லை.
* பாதை தெரியாப் பயணம்.
* எஞ்சும் பிரசைகளிற்கு...
* அழிவு அரசியல் பற்றி...
* ஒரு கோடை அழைப்பு.
* சமூக முன்னோட்டமும், முற்போக்காளர்களும்.
* பூச்சியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ் திரைப்படங்கள் :

# திரைக்கதை– ஒரு ஒட்டு வேலை!

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர். வெற்றிப்படத்தைத் தயாரித்த தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர் முதல் பட நிறுவனத்தின் ஆபீஸ் பையன் வரை அனைவரும் வெற்றியில் தம் பங்கையும், வெற்றிக்கான காரணங்களையும் விளக்குகின்றனர்.

இயக்குனரைக் கேட்டால் தான் பிறந்தவுடனேயே கருத்தரித்த கதை இது என்றும், அன்று முதல் இன்றுவரை பொருத்தமான நடிகர்கள், தயாரிப்பாளர்கள் கிடைக்காததால்தான் பிரசவம் தாமதமானதென்றும், மற்றபடி இது வெற்றிப் படம் என்று அதன் நெற்றியிலேயே எழுதி ஒட்டப்பட்டிருந்ததென்றும் கூறுவார்.

நடிகரைக் கேட்டால் தனக்கு ஏற்கனவே ஒரு நாளைக்கு சராசரி 1112 கடிதங்கள் வருவதாகவும், பல மொழிகளிலும் 93 படங்களுக்கு கால்ஷீட் கொடுத்திருப்பதாகவும் இந்தப் படத்தின் கதையை இயக்குனர் சொன்னவுடனே அதில் 23 படங்களின் கால்ஷீட்டை ரத்து செய்துவிட்டு ஒப்புக் கொண்டதாகவும், தனது பாத்திரத்துடன் அப்படியே ஒன்றிப் போய் நடித்ததாகவும் மற்றப்படி இதன் வெற்றிக்கு விசேடமான வேறு காரணங்கள் எதுவும் இல்லை என்றும் தன்னடக்கத்துடன் கூறுவார்.

பரம்பரையாக இந்தத் தொழிலில் ஊறியவரா அல்லது ஊரில் மிளகாய் வியாபாரத்தை மூட்டை கட்டி விட்டு, நடிகைகளை குளோசப்பில் பார்க்க சென்னைக்கு ரயிலேறியவரா என்பதைப் பொறுத்துத் தயாரிப்பாளரின் விளக்கம் வித்தியாசப்படும்.

படத்திற்கு பூஜை போடும் போது, வெங்கடாசலபதி படத்துக்கு ஐயர் போட்ட மாலை நழுவி கீழே விழுந்தபோதே படத்தின் வெற்றி உறுதியாகிவிட்டதென்று ஆபீஸ் பையன் 'சென்டிமெண்டலாக' விளக்கம் தருவான்.

இதில் எது காரணம் என்று புரியாவிட்டாலும், எதற்கும் இருக்கட்டும் என்று அட்வான்ஸ் பணத்தை மடியில் கட்டிக் கொண்டு வெற்றிப்பட இயக்குனரையும் கதாநாயகனையும் பல தயாரிப்பாளர்கள் துரத்திக் கொண்டிருப்பார்கள்.

அதே இயக்குனர், அதே கதாநாயகன், கதாநாயகி, அதே இசையமைப்பாளர், கிட்டத்தட்ட அதே கதையை படமெடுத்து கவிழ்ந்தவர்களோ ஆபீஸ் பையனின் விளக்கம் தவிர வேறெதையும் ஏற்றுக் கொள்ள முடியாமல் முனகிக் கொண்டிருப்பார்கள்.

இந்தியாவில் ஆறாவது பெரும் தொழில் என்று சொல்லப்படும் திரைப்படத் தொழிலின் சென்னை அதிபர்களையும், இயக்குனர்களையும் இன்று குடைந்து கொண்டிருக்கும் கேள்வி இதுதான்: 'சின்ன தம்பி' ஏன் இப்படி தலைதெறிக்க ஓடுகிறது? என்ன காரணம்? யார் காரணம்?


கதாநாயகன் பிரபுவா, கதாநாயகி குஷ்பூவா? பிரபு - குஷ்பூ ஜோடியா, இயக்குனரா, இளையராஜாவின் இசையா, அம்மா - மகன் சென்டிமென்டா, அப்பாவிக் கதாநாயகன் - பணக்கார நாயகி காதலா, ஒளிப்பதிவா? ஆளுக்கொரு காரணம் சொல்கிறார்கள்.

எதுவுமே காரணமில்லையென்றும் ஏதோ குருட்டு அதிர்ஷ்டத்தில் ஓடுகிறது என்றும் மக்களின் ரசனையை என்னவென்றே புரிந்து கொள்ள முடியவில்லை என்றும் சிலர் சபிக்கிறார்கள். பல கருத்துவேறுபாடுகள் இருப்பினும் சின்னத்தம்பி போன்ற படங்களின் சீசன் என்பதை மட்டும் அனைவரும் ஏற்கிறார்கள்.

அதென்ன சீசன்? வளைகுடா யுத்தம், காஷ்மீர் பிரச்சினை, இலங்கைப் பிரச்சினை காவிரிப் பிரச்சினை, மதவெறி, சாதிவெறி போன்ற நடப்பு விவகாரங்களை மையமாக வைத்து சின்னத்தம்பி எடுக்கப்பட்டிருக்கிறதோ என்று படத்தைப் பார்க்காதவர்கள் குழம்ப வேண்டாம். பண்ணையாரின் பாசமிகு தங்கைக்கும், கிராமத்து அப்பாவி பாட்டுக்காரனுக்கும் காதல், மோதல், சேர்தல் - இதுதான் கதை.

''கதாநாயகனுக்குத் தங்கைப் பாசம் என்பது வழக்கமான கதை. அதை மாற்றி வில்லனுக்குத் தங்கைப் பாசம் என்று சித்தரித்தேன். படம் வெற்றி பெற்றுவிட்டது'' என்கிறார் இதன் இயக்குனர். ஆக, வில்லனுக்கும் தங்கைப் பாசம் இருக்கலாம் என்று தமிழக மக்கள் ஏகமனதாக ஏற்றுக் கொண்டு விட்டார்கள்.

இதில் சீசனுக்கு என்ன வேலை என்கிறீர்களா? சின்னத்தம்பி, என் ராசாவின் மனசிலே, வைகாசி பொறந்தாச்சு, நண்பர்கள்... இப்படி எல்லா நூறுநாள் படங்களும் காதல் படங்கள். மற்ற பிரச்சினைகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு தமிழக ரசிகப் பெருமக்கள் ஒட்டுமொத்தமாக இப்போது காதல் வயப்பட்டிருக்கிறார்கள். எனவே இது காதல் சீசன். அதனால்தான் போலீசு கோர்ட், சட்டம்... என்று படம் எடுத்துக்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டிருந்த எஸ்.ஏ.சந்திரசேகர் கூட காதல் படம் எடுத்து, தன் பெயரைப் போட்டால் ரசிகர்கள் பயந்து விடுவார்களோ என்று மனைவி பெயரில் வெளியிட்டு வெற்றியும் பெற்றுவிட்டார்.

சரி. இந்த சீசன் எப்போது முடியும்? இது சாதாரணக் கேள்வியல்ல; பல கோடி ரூபாய் மதிப்புள்ள கேள்வி. இதற்கு விடை தெரியாமல்தான் கோடம்பாக்கம் குமுறிக் கொண்டிருக்கிறது. திடீரென்று ''சட்டம் ஒரு சாக்கடை'' என்று ஏதாவதொரு படம் ஓடிவிட்டால் கோடம்பாக்கமே எரிமலையாகும்; எல்லா ஸ்டுடியோக்களிலும் புரட்சி வெடிக்கும். ரத்த ஆறு ஓடும்.

சினிமாவின் பருவகால மாற்றங்கள் குறித்த முன்னறிவிப்புகளெல்லாம் வானிலை அறிக்கைகள் போலவே பொய்த்துப் போகின்றன. இந்த நெருக்கடியிலிருந்து திரையுலகம் மீளவே முடியாது. மக்களை மயக்கத்தில் ஆழ்த்த அவர்கள் பின்னிய வலையில் அவர்களே சிக்கித் தவிக்கிறார்கள்.

எந்த இயக்குனர் அல்லது தயாரிப்பாளரைக் கேட்டாலும் சரியான கதை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருப்பதாகத்தான் கூறுவார்கள்.

ஆனால் ஒரு நல்ல நாவல் அல்லது சிறுகதையைப் படமாக்கும் முயற்சியிலோ அல்லது நிலவுகின்ற அரசியல் பண்பாட்டுச் சுழலுக்கேற்ற கதையைத் தயாரிக்கும் முயற்சியிலோ இவர்கள் தவறிக்கூட ஈடுபடுவதில்லை. திரைக்கதைக்கென கோடம்பாக்கம் (அல்லது இந்தியத் திரையுலகம்) உருவாக்கி வைத்துள்ள மூலக்கூறுகளை உரிய விகிதத்தில் கலந்துதான் திரைக்கதையைத் தயாரிக்கிறார்கள்.

**திரைப்படத் தொழிலின் சென்னை அதிபர்களையும், இயக்குனர்களையும் இன்று குடைந்து கொண்டிருக்கும் கேள்வி இதுதான்: 'சின்னதம்பி' ஏன் இப்படி தலைதெறிக்க ஓடுகிறது? என்ன காரணம்? யார் காரணம்?**

இப்படித் தயாராகும் படங்கள் காதல், காமெடி, பக்தி, சென்டிமென்ட், க்ரைம், திகில், ஆக்ஷன் - என்று ஏதாவது ஒரு வகையில் வருவதாக இருக்க வேண்டும். உலகின் மாபெரும் இலக்கியங்களில் ஒன்றை படமாக்குவதாக இருந்தாலும் அந்தக் கதை அக்குவேறு ஆணிவேறாகப் பிரிக்கப்பட்டு மீண்டும் திரைக்கதையாக ஒன்று சேர்க்கப்படும் போது அதன் உருவமே மாறியிருக்கும்.

திரைக்கதை எப்படி உருவாகிறது என்ற கதையைத் தெரிந்து கொண்டால் இந்த ரசவாதத்தைப் புரிந்து கொள்ள முடியும். கதை குறித்த இவர்களது அக்கறை எவ்வளவு பெரிய மோசடி என்பதையும் விளங்கிக் கொள்ள முடியும்.

திரையுலகத்தைப் பொறுத்தவரை காப்பி வாங்கி வரும் பையன் முதல் இயக்குனர் வரையில் அனைவரும் ஒரு வகையில் கதாசிரியர்களே. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒவ்வொருவரிடமும் நான்கைந்து கதைகளாவது ஆர்ட்டீஷியன் ஊற்றுக்களாக பெருகிக் கொண்டிருக்கும். இவை தவிர ஒவ்வொரு இயக்குனரின் குப்பைக் கூடையிலும் தமிழகத்தின் மூலை முடுக்குகளிலிருந்தெல்லாம் கதாசிரியர் ஆக விரும்பும் ரசிகர்களால் அனுப்பப்பட்ட கதைகள் - கனவுகள் - சீல் உடைக்கப்படாமல் குவிந்திருக்கும்.

இவற்றையெல்லாம் எந்தத் தயாரிப்பாளரும் சீந்துவது கூடக்கிடையாது. தயாரிப்பாளரோ, இயக்குனரோ புதுப்படம் தயாரிக்க வேண்டுமென்றால் இதற்காகவே இருக்கின்ற விரல்விட்டு எண்ணத்தக்க ஒரு சில கதாசிரியர்களைத்தான் அணுகுவார்கள் ஒவ்வொரு பட நிறுவனத்துக்கும் ஆஸ்தான கதாசிரியர்களும் உண்டு.

காதல், சென்டிமென்ட, ஆக்ஷன் என்று எந்த வகைப் படம் எடுக்க தயாரிப்பாளர் விரும்புகிறாரோ இந்த வகையில் ஏழெட்டு கதைகளை ஜவுளிக்கடையில் துணி எடுத்துப் போடுவது போலப் போடுவார் கதாசிரியர். கதை கேட்கும் தயாரிப்பாளர் கதையைத் திருடிவிட வாய்ப்புள்ளது என்பதால் முழுக்கதையையும் கதாசிரியர் சொல்லமாட்டார். இது முதல் சுற்று.


முதல் சுற்றில் கேட்ட கதையில் ஏதாவது ஒன்றைப் பரவாயில்லை என்று தயாரிப்பாளர் முடிவு செய்தால் கதாசிரியர் இரண்டாவது சுற்று கதை சொல்ல ஆரம்பிப்பார். கதை சொல்வதென்றால் சாதாரணமாக இல்லை. தயாரிப்பாளர் கண்ணைக் மூடிக் கொண்டால் கண்ணுக்குள் படம் ஓடும்; கண்ணைத் திறந்தால் எதிரில் கதாசிரியர் நடித்துக் கொண்டிருப்பார். காதலிக்க நேரமில்லை படத்தில் நாகேஷ் கதை சொல்வது போலவேதான்.

அதற்குப் பிறகு எந்த கதாநாயக நடிகரின் கால்ஷீட் கையிலிருக்கிறது என்பதை தயாரிப்பாளர் சொல்வார். அந்தக் கதாநாயகனின் மீட்டருக்கு ஏற்பக் கதையை மாற்றச் சொல்வார்.

மீட்டர் என்ற கோடம்பாக்கம் மொழிக்கு இந்த இடத்தில் பொருள் சொல்ல வேண்டும். கதாநாயகன் விஜயகாந்த் என்றால் சண்டைக்காட்சிகள் மற்றும் தமிழினப் பெருமை பற்றிய விசயங்கள் வருவதுபோலவும், ரஜனிகாந்த் என்றால் சண்டை, தத்துவம், மற்றும் சூப்பர் ஸ்டார் என்று குறிக்கத்தக்க வசனங்கள் ஆகியவை வருவது போலவும் திரைக்கதையை மாற்றியமைக்க வேண்டும். எம்.ஜி.யார் படங்கள் நான்கு பார்த்தீர்களானால் இதைப் புரிந்து கொள்வது வெகு சுலபம்.

''கதையை மாற்றுவதாகாது! என்னுடைய படைப்பை நான் சிதைக்க மாட்டேன்'' எனறு எநதக் கதாசிரியரும் ஆர்த்தெழுந்தது கிடையாது. தயாரிப்பாளரின் கோரிக்கைக்கு ஏற்ப எவ்வளவு துரிதமாக கதையை மாற்றுகிறார் என்பதுதான் அவரது திறமையின் அளவுகோல்.

தயாரிப்பாளரிடமிருந்து இப்படி ஒரு கோரிக்கை வந்த மறுகணமே பி.யூ. சின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சினிமாவுக்குள் சினிமா!

தமிழ்சினிமா முட்டாள் தனமானது அதைத் தயாரிப்பவர்களோ அடிமுட்டாள்கள். சினிமாவுக்குள் சினிமா. கீழ்க் கண்ட சில உதாரணங்கள்.

● ஆடு, மாடு, கோழி படங்கள் வெற்றி பெற்றதன் விளைவு முக்கிய 'வேடத்தில் நடிக்க' நாய்க்கு சம்பளம் ஏறி விட்டதாம். எவ்வளவு தெரியுமா? ஒரு லட்ச ரூபாய்.

● முத்துராமன் மகன் கார்த்திக், சிவாஜி மகன் பிரபு, தியாகராஜன் மகன் பிரசாந்த் என்று நடிகர்களின் வாரிசுகள் மட்டும் தான் நடிகராக வேண்டுமென்பதில்லை. 'ஆட்டுக்கார அலமேலு' என்னும் தேவர் படத்தில் நடித்த ராமு என்ற ஆட்டின் ஒரே மகனான மணிகண்டன் எங்க ஊரு ஆட்டுக்காரன்' படத்தின் ஹீரோ.

● வெற்றி பெற்ற கதையை காப்பியடித்து அதே பாணியில் மகன் கணக்கில் படம் வெளியிடுவது மட்டுமில்லை. தலைப்பும் காப்பிதான். எங்க ஊரு எனத் தொடங்கும் படங்களாக வந்தன. இப்போது 'இதுதாண்டா போலீசு' வெற்றியைத் தொடர்ந்து ஏண்டா நீயா அரசாங்கம், போடா புண்ணாக்கு, நான்தாண்டா எம்.எல்.ஏ - என்று படங்கள் வெளியாகின்றன.


● தாங்கள் தயாரிக்கும் கதையில் மட்டுமல்ல தங்களது வாழ்க்கையிலும் சென்டிமென்டில் ஊறியவர்கள் சினிமாக்காரர்கள். ஏதோ ஒரு திரைப்படத்தின் பாடல்கள் பிரமாதமாக பிரபலமாகி விட்டனவாம். அந்தப் படத்தின் பாடல் பதிவின் போது ரிகார்டிங் தியேட்டரில் உள்ள கம்ப்யூட்டர் ஒன்றின் மீது யாரோ மறதியாக ஒரு ரூபாய் நாணயம் ஒன்றை வைத்து விட்டார்கள் போலிருக்கிறது. 'வெற்றியின் ரகசியம்' கண்டுபிடிக்கப் பட்டு விட்டது. இப்போது கம்ப்யூட்டருக்கு மேல் நூற்றுக்கணக்கில் ஒரு ரூபாய் நாணயங்கள்!

## சினிமா போதும், போலீசு எதற்கு?

ஈழப் போராளிக் குழுக்களை வளர்த்துவிட்டது யார் என்று இங்கே ஒருவரையொருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருக்கும் நேரத்தில் போராளிகள் இயக்கம் வளர்ந்ததற்கான உண்மையான காரணத்தை பஞ்சு அருணாசலம் கண்டுபிடித்து விட்டார்.

"சிங்கள அரசு தமிழ்ப்பட இறக்குமதியின் மீது விதித்த கட்டுப்பாடு காரணமாக இலங்கைக்கு தமிழ்ப்பட ஏற்றுமதி குறைந்தது! சரியான 'பொழுது போக்கு வடிகால்' இல்லாத காரணத்தினால்தான் போராட்ட உணர்வு வளர்ந்து விட்டது."

முக்காலும் உண்மை. ஈழத்தில் போராட்ட உணர்வு வளர்ந்ததற்கு மட்டுமல்ல தமிழகத்தில் வளராததற்கும் இதுவே காரணம்.



னப்பா படத்திலிருந்து சென்னையில் ஓடிக் கொண்டிருக்கும் ஆங்கிலப்படம் வரை எந்தெந்தப் படத்திலிருந்து எந்தெந்தக் காட்சிகளைத் திருடலாம் என்று கதாசிரியர் பட்டியல் போடுவார்.

இப்படியாகப் பொதுவான திரைக் கதை முடிவு செய்யப்பட்டபின் கதாநாயகன், கதாநாயகி ஆகிய அனைவரிடமும் "படத்தில் உங்கள் பாத்திரம்தான் தங்கப் பாத்திரம் மற்ற பாத்திரமெல்லாம் பிச்சைப் பாத்திரம்" என்கிற ரீதியில் அவரவர்க்குத் தகுந்தாற்போல ஆளுக்கொரு கதையைச் சொல்லி ஒப்பந்தம் போடுவார்கள். நடிகர்களுக்குத் தங்கள் இமேஜ் பாதிக்கப்பட்டுவிடக் கூடாதே என்ற கவலை; தயாரிப்பாளருக்கு உண்மைக் கதையைச் சொன்னால் நடிக்க ஒப்புக்கொள்வாரா என்ற சந்தேகம்; கதையைத் திருடி நமக்கு முன்னால் தனியே படமெடுத்து விடுவானோ என்ற அச்சம்.

"என்னிடம் கால்ஷீட் கேட்டு வரும் தயாரிப்பாளர்களெல்லாம் 'ஒரு நல்ல காரெக்டர் ரோலும்மா, கூட ஒரு டான்ஸ்' என்று சொல்லித்தான் வருகிறார்கள். ஆனால் அந்த காரெக்டர் ரோலை நான் இது வரை கண்ணால் பார்த்ததே கிடையாது." என்று நடிகை(!) சிலுக்கு ஸ்மிதா கூறுவதிலிருந்து இந்த மோசடியின் பரிமாணத்தைப் புரிந்துகொள்ளலாம்.

இப்படியாக நடிகர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டு படப்பிடிப்பு துவங்கிய பின்னராவது திரைக்கதை மாறாமலிருக்குமா என்றால் கிடையாது.

படத்தில் காதல் போதை, சென்டிமென்ட் நெடி, நகைச்சுவை அபத்தம், சண்டைக்காட்சி எனும் கோமாளித்தனம் ஆகியவை போதிய அளவு இல்லை என்று தயாரிப்பாளர் கருதினால் திரைக்கதை மேலும் வீங்கும். பெரிய இயக்குனராக இருந்தால் தயாரிப்பாளர் தனது யோசனையைத் தெரிவிப்பார்; புதிய இயக்குனராக இருந்தால் உத்தரவிடுவார்.

ஒழுங்காகப் படப்பிடிப்புக்கு வராததாலோ, வேறு தகராறு காரணமாகவோ நடிகர்களை மாற்ற நேர்ந்தால் அதற்கேற்பவும் திரைக்கதை மாறும்.

கதாநாயகனோ, நாயகியோ பாதிப்படம் முடிந்த நிலையில் படத்தில் போதிய முக்கியத்துவம் தரப்படவில்லையென்று கருதினால் அவர்களை திருப்திப்படுத்தும் பொருட்டு வசனமோ, சண்டைக்காட்சியோ, கனவுக்காட்சியோ தேவைக்கேற்ப சேர்க்கப்படும்.

படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும் போதே இதே கதையில் வேறுபடம் வெளியாகிக் கவிழ்ந்தாலும் சரி, ஓடினாலும் சரி கதையை மாற்ற வேண்டிவரும்.

ஏறத்தாழப் படம் முடியும் தறுவாயில் விநியோகஸ்தர்கள் அதைப் பார்த்துவிட்டுக் கூறும் யோசனைகள் அல்லது ஆணைகளுக்கேற்ப மறுபடியும் மாற்றங்கள், சேர்க்கைகள் நடக்கும்.

இப்படி, கேட்டவர்க்குக் கேட்டபடியெல்லாம் வீங்கி வடியும் திரைக்கதையில் ரகசியம் என்ன வாழ்கிறது என்று நீங்கள் ஏளனமாக நினைக்கக் கூடும். ஆனால் தயாரிப்பாளர்களைப் பொறுத்தவரை திரைக் கதை ரகசியம் என்பது அமெரிக்காவின் நைட்ரஜன் குண்டு தொழில்நுட்ப ரகசியத்துக்கு இணையானது.

படப்பிடிப்பு முடிந்து எடிட்டிங் செய்யப்பட்டு தணிக்கைக்கு அனுப்பத் தயாராகும் போதுதான் திரைக்கதை என்ன என்பது பல நடிகர்களுக்கே தெரியவரும். ஏதாவது ஒரு 'முக்கியமான' அரை நிர்வாணக் காட்சியோ, கற்பழிப்புக் காட்சியோ கதைக்குப் பொருத்தமாக இல்லையென்று தணிக்கைக் குழு வெட்டி விடுமானால் அந்தக் காட்சிகளுக்கு அனுமதி பெறும் வகையில் திரைக் கதை மீண்டும் கூட திருத்தியமைக்கப்படும்.


கோடம்பாக்கம் கனவுத் தொழிற்சாலைகளின் கதை உற்பத்தி இப்படித்தான் நடக்கிறது. ஒரு கதை திரைக்கதையாக உருமாறும்போது அது என்ன பாடுபடுகிறது என்பதை மூலக்கதையை எழுதிய கதாசிரியனால்தான் முழுமையாக உணரமுடியும்.

சினிமாக் கதாசிரியர்கள், இயக்குனர்களைப் பொருத்தவரை அநேகமாக பல புது முகங்களுக்கு முதல் இரண்டு படங்கள் வெற்றிதான். பல ஆண்டுகளாக சிந்தித்து அசை போட்டும், அன்றாட வாழ்க்கையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யும் மக்களையும் நெருக்கமாக இருந்து கவனித்தும் கிடைத்த அனுபவமெல்லாம் அதிகபட்சம் இரண்டு படங்களில் வறண்டு விடும்.

நல்லதோ, கெட்டதோ எந்தக் கருத்தைச் சொல்ல வேண்டுமானாலும் உலக நடப்புகளுடனும் மக்களுடனும் தொடர்பு வேண்டும். ஆனால் முதல்படம் வெற்றியடைந்தவுடனேயே இருக்கின்ற தொடர்புகளும் அறுந்துவிடும். ஒரு வெற்றிப்படம் வெளியானவுடனே அந்த இயக்குனரையும், கதாசிரியரையும் கையில் முன் பணத்துடன் தயாரிப்பாளர்கள் மொய்க்கத் தொடங்குவார்கள். மது, மாது, நட்சத்திர விடுதி வாசம் — இவைதான் அதன்பின் அவர்களது உலகம்.

சேர்த்து வைத்திருந்த சரக்கெல்லாம் வற்றிப் போன பின், டன்லப் மெத்தை, குளுகுளு கார், துதிபாடும் பரிவாரங்கள் ஆகிய வற்றைக் காப்பாற்றிக் கொள்வதற்காக 'எதையாவது' செய்ய வேண்டும். 'பிரபல' இயக்குனராக, கதாசிரியராக நீடிக்க வேண்டும். அதற்காக கதையை, காட்சியை மற்ற படங்களிலிருந்து திருடி, உருமாற்றி, முடிந்த அளவு மட்டரகமான ரசனைகளுக்குத் தீனி போடும் விதத்தில் படங்கள் தயாராகும். தயாரிப்பாளர், விநியோகஸ்தரின் நிர்ப்பந்தம் இன்றியே இவை நடக்கும்.

கோடம்பாக்கம் குல்லாய்க்கு ஏற்ப தலையைச் சீவிக் கொள்ளத் தயங்கும் புதிய இயக்குனர்கள் இவர்களைப் பொருத்தவரை முட்டாள்கள். இத்தகைய 'முட்டாள்களை' திரையுலக எந்திரம் துழாவி எடுத்துத் துப்பி விடும்.

பிரபல கதாநாயக நடிகரும், வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தன்னை ஒரு அறிவு ஜீவியாகக் காட்டிக் கொள்வதில் மிகவும் விருப்பமுடையவருமான கமலஹாசன் நடிப்பில் தயாராகும் ஒரு படத்தை 'கலைப் படம்' என்று ஒரு பத்திரிக்கை எழுதிவிட்டது. உடனே ஏதோ கெட்டவார்த்தையைக் கேட்டவரைப் போல சிலிர்த்தெழுந்து ஒரு பக்கத்திற்கு அதற்கு மறுப்பு எழுதியிருக்கிறார் அவர். தயாராகி வருவது எல்லா மசாலா அயிட்டங்களும் கலந்த ஜனரஞ்சகப் படம்தான் என்றும் இவ்வாறு 'கலைப்படம்' என்று அந்தப் பத்திரிகை எழுதிவிட்டதால், தனது விநியோகஸ்தர்களின் 'ரத்த அழுத்தம்' கூடிவிட்டதாகவும் சொல்லி வருத்தப்பட்டிருக்கிறார்.

''எதார்த்தத்தைப் பார்ப்பதென்றால் வீட்டு வாசலில் உட்கார்ந்து தெருவை வேடிக்கைப் பார்க்கலாமே அதற்கு ஏன் காசு கொடுத்து டிக்கெட் வாங்கி சினிமாக் கொட்டகைக்கு வரவேண்டும்?'' புரட்சிப் படம் எடுக்காவிட்டாலும் பரவாயில்லை, எதார்த்தத்தை கொச்சைப்படுத்தாமல் சித்தரிக்க முடியாதா என்ற கேள்விக்கு திரையுலகம் தரும் பதில்தான் இது.

சமூக எதார்த்தத்தின் மீது தமிழ்த் திரை உலகம் கொண்டிருக்கும் வெறுப்பும் அலட்சியமும் தான் திரைக்கதை என்பதையே முற்றிலும் கேலிக் கூத்தாக்கிவிட்டது.

இரண்டரை மணிநேரம் ஓடும் திரைப்படத்தின் வாயிலாக மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும் அல்லது சிந்திக்கத் தூண்ட வேண்டும் என்ற வகையில் யோசித்து திரைப்படத்தை இவர்கள் தயாரிப்பதில்லை. மாறாக இரண்டரை மணிநேரத்தையும் 15 பத்து நிமிடங்களாகப் பிரித்து ஒவ்வொரு 10 நிமிடத்தையும் 'தொய்வின்றி' தள்ளுவது எப்படி என்று மட்டுமே சிந்திக்கிறார்கள்.

ஒரு தாகம் தீர்க்கும் வன்முறை, ஒரு தாகத்தைத் தூண்டும் நடனம், ஒரு ஏங்க வைக்கும் ஊடல், மூக்கைச் சிந்தவைக்கும் ஒரு செண்டிமெண்ட், நாற்காலியின் முனைக்கு இழுக்கும் திகில், சிந்திக்காமலேயே சிரிக்கத் தூண்டும் நகைச்சுவை, அடுத்தது என்ன என்ற தவிப்பிற்குள்ளாக்கும் முடிச்சுகள், பிரமிக்க வைக்கும் அற்புதங்கள் - இப்படிப் பலதுண்டுகளின் சேர்க்கைதான் திரைக்கதை. கதை காட்சியமைப்புகளைத் தீர்மானிப்பதேயில்லை.

''கவுண்டமணி - செந்தில் காமெடிக்காகவே நாலு வாட்டி பார்த்தேன்'' ''கடைசி சண்டைக்காகவே மூணு வாட்டி பார்த்தேன்'' என்று ரசனையின் தரத்தை இறக்கியதற்கு இவர்கள் தான் பொறுப்பு. இந்த ரசனைக்குத் தீனிபோடவும், ஈடுகொடுக்கவும் வேண்டி இப்போது ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒரு முடிச்சு போடவோ அவிழ்க்கவோ வேண்டிய நிலை உருவாகிவிட்டது.

கதாசிரியர்களும் இயக்குனர்களும் இன்று இதைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள். ''அதே கதைதான். ஆனால் வித்தியாசமான முறையில் சொல்லியிருக்கிறோம்'' என்று சொல்வதற்கு எந்த இயக்குனரும் இப்போது தயங்குவதில்லை. நான்கு பழைய படங்களின் கதையைக் கலக்கி உருவாக்கப்பட்டதுதான் 'சகலகலா வல்லவன்' எனும் வெற்றிப்படம் என்று வெளிப்படையாக பேட்டி கொடுக்கிறார் ஏ.வி.எம். பட நிறுவனத்தின் அதிபர்.

சினிமாவுக்கு கதை; அரசியல் கட்சிக்குக் கொள்கை. வேறுபட்ட கொள்கைகளோ, திட்டங்களோ இல்லாமல் பல்பொடி, சீப்பு, செருப்பு, குடம், என்று இலவச அறிவிப்புகளையே கட்சிகள் தமது கொள்கைகளாகச் சித்தரித்து வெற்றி பெறுவது போல, உருப்படியான கதை என்று ஒன்று இல்லாமல் அற்ப உணர்வுகளுக்கு மட்டும் கொஞ்சம் தீனியை வாரி இரைத்து விட்டு படத்தை வெற்றிப்படமாக்க முடிகிறது.

சமுதாயத்தில் உதிரி வர்க்கம் பெருத்து வருகிறது. உதிரி வர்க்கத்தின் பார்வைக்கு எட்டும் அளவு அரசியல்; உதிரி வர்க்கத்தின் ரசனைக்கு எட்டும் அளவு சினிமா.

● சூரியன்

''கவுண்டமணி - செந்தில் காமெடிக்காகவே நாலு வாட்டி பார்த்தேன்'' ''கடைசி சண்டைக்காகவே மூணு வாட்டி பார்த்தேன்'' என்று ரசனையின் தரத்தை இறக்கியதற்கு இவர்கள் தான் பொறுப்பு. இந்த ரசனைக்குத் தீனிபோடவும், ஈடுகொடுக்கவும் வேண்டி இப்போது ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒரு முடிச்சு போடவோ அவிழ்க்கவோ வேண்டிய நிலை உருவாகிவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# என்.பத்மநாதனின் 'மனக்கோலங்கள்'

## நாடகம்

காட்சி1

*படித்த இளைஞர், இவருக்கு ஆதரவாக இரு பொதுமக்கள், ஓர் இளைஞன், சமூக அறிஞர், இவரது நண்பன், இவர்கள் மேடையில் அனைத்துப் பகுதிகளையும் நிரப்பியவண்ணம் அசையாது நிற்கின்றனர். மேடையில் ஒளி பரவியுள்ளது*

ஒரு குரல்: (மேடையின் பின்பக்கம் இருந்து)
எமது போராட்டத்துக்கு நாங்கள் ஒடுக்கப்பட்ட மக்களை இணைக்கிறோம். மலையக மக்களை இணைத்துக் கொள்கிறோம். வெளி மாவட்டத்தினரை இணைக்கிறோம்.

*படித்தஅறிஞர் எதையும் கவனியாததுபோல மேடையில் அங்கும் இங்குமாக நடந்து திரிகிறார்*

சமூக அறிஞர்: (மேடையை நோக்கி) நீங்கள் யார்? நீங்கள் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் இல்லை, மலையக மக்கள் இல்லை, முஸ்லீம் மக்கள் இல்லை. வெளிமாவட்டம் இல்லை அப்போ நீங்கள் யார்?
ஓர் குரல் (மீண்டும்): எமது போராட்டத்துக்குப் பல்வேறு காரணங்கள் இருந்தபோதும் தரப்படுத்தல் ஒரு முக்கிய காரணமாகும். ஆகவே தரப்படுத்தலை நீக்கப் போராடுவோம்.

சமூக அறிஞர்: தரப்படுத்தல் என்ற சட்டம் வந்தபின்தான் மட்டக்களப்பு, அம்பாறை, முதூர், திருமலை, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, புத்தளம், கிளிநொச்சி ஆகிய இடங்களில் இருந்து பல மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளனர் ஆகவே தரப்படுத்தலை நீக்கு என்ற கோஷம் யாழ் மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டத்தினர்க்கு எதிரான கோஷமாகும்.

சமூக அறிஞரின் நண்பர்: இங்கு அரசியல் வேண்டாம்!
*அனைவரும் மேடையில் இருக்க குழந்தைகள் மேடையைச் சுற்றி ஆடிவருகின்றனர். நடனம் ஆரம்பிக்கும்போது நிற்கும் ஏனையோர் ஆரம்பத்தில் நின்றுவிட்டு நடனம் தொடங்க நிலத்தில் அமர்கின்றனர்.*

பாடல்:

குழந்தைகள் ஆனவர்ஜவர் மக்களை நோக்கி
குறைகளைப் போக்க எண்ணி இங்கு வந்தார்
அறிஞர்கள் இவர்களை மக்கள் இனம்காண
அறியாமை போக்க எண்ணி இங்கு வந்தனர்

*பாடலின் முடிவில் ஒரு குழந்தை திடீரென மயங்கி விழுகிறது. சமூக அறிஞர் பதற்றத்துடன் எழுந்து செல்கிறார். மேடையில் திடீரெனச் சற்றுப் பலத்த ஒலி_ மற்றவர்கள் எழுந்து குழந்தை இருக்கும் இடம் நோக்கி வருகின்றனர். படித்த அறிஞர் எழுந்து, வாசித்தவண்ணம் நிற்கிறார்.*

குழந்தை: கடவுள்
பொதுமகன்1: குழந்தை கடவுள் என்கிறது.

குழந்தை: விடு...
பொதுமகன்2: குழந்தை விடுதலை என்கிறது
பொதுமகன்1: ஆமாம்! இது தெய்வக் குழந்தை!!
சமூக அறிஞர்: குழந்தைக்கு மூளையில் தாக்கம் ஏற்பட்டுவிட்டது
பொதுமக்கள்: இல்லை இல்லை இது தெய்வக் குழந்தை!

படித்த அறிஞர்: இந்தியாவில் ஒரு சிறிய குழந்தை எதிர்காலத்தைப் பற்றிய உண்மைகளைக் கூறுவதாகப் படித்தேன். அமெரிக்காவிலும் அப்படியொரு சம்பவம் நடந்ததாக ஒரு புத்தகத்தில் படித்தேன். இது ஞானக்குழந்தைதான்.
பொதுமகன்1: அமெரிக்காவில் நடந்ததாம் அப்ப அது உண்மைதான்
பொதுமகன்2: திருஞானசம்பந்தரும் மூன்று வயதிலை தேவாரம் பாடினவர்தானே!
இளைஞன்: ஆமாம், இது தெய்வக் குழந்தையேதான், இந்த மகிழ்ச்சியை நாங்கள் கொண்டாடுவோம்.

பாடல்:

தெய்வம் பிறந்தது ஞானம் பிறந்தது அரகரோகரா
ஞானம் பிறந்தது ஞாயிறு உதித்தது அரகரோகரா
ஏழ்மைகள் நீங்கும் கல்விகள் ஓங்கும் அரகரோகரா
வாழ்க்கை ஓங்கும் வழிகள் பிறக்கும் அரகரோகரா



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காட்சி 2

சமூக அறிஞர்: சும்மா ஆடல்பாடல்களை விட்டிட்டு உங்கடை பிரச்சனைகளைத் தீர்க்க வழியைப் பாருங்கோ

அந்தக் குழந்தையின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கோ

அந்தக் குழந்தையின் மனநோயைப் பற்றி மனநோய் மருத்துவரைக் கலந்தாலோசியுங்கோ

பொதுமகன்1: நாங்கள் இந்த அறிஞரிடமும், அந்தத் தெய்வக் குழந்தையிடமும்தான் எங்கள் பிரச்சனைகளைப் பற்றி ஆராய்வோம்.

பொதுமகன்2: நாங்கள் எங்கள் பிரச்சனைகளை இந்தக் குழந்தையிடம் கேட்போம்

*எல்லோரும் குழந்தையைச் சூழ்கின்றனர்*

குழந்தை: வெளி....

பொதுமகன்1: குழந்தை வெளி... என்று கூறுகிறது, அதன் விளக்கம் தெரியவில்லையே

பொதுமகன்2: அறிஞரிடம் கேட்போம்

*படித்த அறிஞரிடம் இருவரும் சென்று மிக்க பணிவுடன் இதுபற்றிக் கேட்கிறனர்.*

படித்த அறிஞர்: வெளி என்று தொடங்கினால் வெளிநாடு என்று பொருள்படும். இப்போது பல நாடுகளில் இருந்தும் மக்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்து பணம் சம்பாதிக்கின்றனர். உங்கள் பிரச்சனை தீர நீங்கள் வெளிநாடு செல்லலாம்.

பொதுமகன்1: நான் நோர்வேக்குப் போறன்

பொதுமகன்2: நான் அமெரிக்காவுக்குப் போறன்

இளைஞன்: நான் கனடாவுக்குப் போறன்.

பாடல்:

நோர்வேயில் வாழப்போகும் சின்னமாமா
நொஸ்க்கு நல்லாப் படிக்கவேணும் சின்னமாமா
கனடாக்குப் போகப்போகும் கனகுமாமா
களவொன்றும் செய்யக்கூடாது நல்லமாமா
அமெரிக்கா போகப்போகும் ஆசைமாமா
அமைதியாக வாழவேணும் ஆசைமாமா
இங்கிலாந்து போகப்போகும் எங்கள் மாமா
இங்கிலீசு படிக்கவேணும் எங்கள் மாமா
வெளிநாடு போகப்போகும் எங்கள் மாமா
எமது நாட்டை மறக்கவேண்டாம் எங்கள் மாமா
காசுபணம் சேர்க்கவேண்டும் எங்கள் மாமா
கலைகள் பல செய்யவேண்டும் எங்கள் மாமா
வெளிநாடு போகப்போகும் எங்கள் மாமா
தாய்நாட்டை மறக்கவேண்டாம் எங்கள் மாமா

சமூக அறிஞர்: எல்லோரும் போனால் நமது நாட்டை யார் பார்க்கிறது? நான் எங்கடை நாட்டிலை எங்கடை மக்களோடை வாழப்போறன்

பொதுமகன்3: நானும் எமது மக்களுடன் வாழ்ந்து எமது பிரச்சனையைத் தீர்க்கப் போராடப் போகிறேன்

காட்சி 3:

பொதுமகன்1: இங்கை பாருங்கோ எங்கட தெய்வம் ஏதோ சொல்லுது

பொதுமகன்2: கிடைக்கும் எண்டு சொல்லுது

பொதுமகன்1: கிடைக்குமாம் கிடைக்குமாம்

பாடல்:

கிடைக்குமாம் கிடைக்கும் எமக்குக் கிடைக்கும்
கிழவிகள் எல்லாம் குமரிகள் ஆகிட
குடிசைகள் எல்லாம் மாடிகள் ஆகிட
மண்கட்டி எல்லாம் பொன்கட்டி ஆகிடக்
கிடைக்கும் கிடைக்கும் எல்லாம் கிடைக்கும்

பொதுமகன்1: என்னாலை ஏலாது, (சலித்துச் சோர்ந்தபடி) என்னாலை ஏலாது

பொதுமகன்2: எனக்கும் களைக்குது நல்லாக் களைக்குது

சமூக அறிஞர்: என்ன உங்களுக்குக் கிடைக்கும்?

பொதுமகன்1: அது தெரியாது, அதுதான் விளங்கேல்லை

பொதுமகன்2: எனக்கும் ஒன்றும் விளங்கேல்லை

பொதுமகன்3: ஒன்றுமே விளங்காமல் ஏன் ஆடுகினம் என்று எனக்கு ஒன்றும் விளங்கேல்லை.

காட்சி4

பொதுமகன்1: (மிகவும் உணர்ச்சியுடன்) செய்திவாற நேரமாச்சு கொஞ்சம் அமைதியாக இருங்கோ

செய்தி: (தலை சுற்றியவாறு சிறிய ஆட்டத்துடன் வந்து நடுவில் நின்று) இது எங்கள் செய்தி. அவர்கள் செய்வது எல்லாம் தவறு. நாங்கள் செய்வதெல்லாம் சரி. நாங்கள் சரியானவற்றையே செய்கின்றோம். அவர்கள் பிழையானவற்றையே செய்கிறார்கள், அவர்களில் பலர் இறந்தார்கள். அவர்களில் பலர் காயமடைந்தார்கள். இது எங்கள் செய்தி.

சமூக அறிஞர்: செய்தியெல்லாம் தலைச்சுத்தும் இருட்டடிப்புமாகத்தான் இருக்குது.

பொதுமகன்1: எத்தினை பேராம் செத்தது?


www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பொதுமகன்2: அங்க குழந்தை கையைக் காட்டுது

பொதுமகன்1: ஐந்து பேராம்

பொதுமகன்2: இல்லை ஐம்பது பேராம்

இளைஞன்: இல்லை அவர்களில் ஐநூறு பேர் செத்திட்டினம், இது மகிழ்ச்சியான நாள்.

படித்த அறிஞர்: அன்று வியட்னாமில் 500 பேர் செத்தார்கள், இதுவும் உண்மையாக இருக்கலாம்.

சமூக அறிஞர்: பிள்ளைக்கு வருத்தம் கடுமையாகிவிட்டது. பிள்ளையைக் காப்பாற்றுவோம்.

*சமூக அறிஞரும் நண்பரும் குழந்தையைத் தூக்கிச் செல்கின்றனர், சிறிது நேரத்தின் பின்னர் இருவரும் வருகின்றனர்.*

சமூக அறிஞர்: அந்தப் பிள்ளை இறந்துவிட்டது.

இளைஞன்: அந்தப் பிள்ளை இறந்தாலும் அவர்களில் 500பேர் செத்த செய்தியைச் சொல்லிப் போட்டுத்தான் செத்திருக்கிறது. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடுவோம்.

சமூக அறிஞர்: அவர்கட்கோ அங்கு திண்டாட்டம், இந்தத் தரம்கெட்ட மாந்தர்க்கோ மரணம் கொண்டாட்டம்

பாடல்:

எலுமிச்சம்பழத்துக்குப் புளிப்பு கொண்டாட்டம் - இந்தத்
தரம் கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்
அவர்கட்கு அங்கு திண்டாட்டம் - இந்தத்
தரம்கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்
மனிதர்கள் உணவின்றி அங்கு திண்டாட்டம் - இந்தத்
தரம்கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்
மனிதர்கள் வீடின்றி ஆங்காங்கே ஓட்டம் - இந்த
தரம்கெட்ட மாந்தர்க்கு மரணம் கொண்டாட்டம்

காட்சி 5

சமூக அறிஞர்: அமைதி, அமைதி! இது உங்களுக்கு மகிழ்ச்சியான நாளா? ஏன் நீங்கள் முட்டாள்களாக நடந்துகொள்கிறீர்கள்

இளைஞன்: இவர் எங்கள் சந்தோசத்தைக் கெடுத்ததும் அல்லாமல், பெரும்பான்மையை எதிர்த்ததுடன் எங்கள் அறிஞர் உட்பட அனைவரையும் முட்டாள் என்றுவிட்டார். எனவே ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக இவருக்கு நாங்கள் மரணதண்டனை வழங்குகிறோம்.

பொதுமகன்3: (சற்றுத் தயங்கி) கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் தோன்றிய எமது மூத்தகுடி மக்களே! நாங்கள் எதிரிக்கும் மதிப்பளித்தே வந்துள்ளோம். இந்த இறந்த அறிஞர் உங்கள் எதிரியேயாயினும் எனது நண்பன் என்ற முறையில் அவரைப்பற்றிச் சிறிது உரையாற்றுவதற்கு எனக்கு அனுமதி வழங்குமாறு வேண்டுகிறேன்.

இளைஞன்: ஒழுங்கான முறையில் பேச அனுமதி வழங்குகிறேன்.

பொதுமகன்3: இந்தச் சமூக அறிஞருக்கு இந்த இளைஞன் வழங்கிய தண்டனை நியாயமானதுதான். ஆனாலும் இந்த அறிஞரைப் பற்றி நீங்கள் முழுவதும் அறிந்திருக்கவில்லை. இங்கு இருக்கும் அறிஞரைப்போல இறந்த அறிஞருக்குப் பொறியியல் அறிவு இல்லைத்தான். உலகளாவிய சஞ்சிகைகள் பற்றிய அறிவு இந்த அறிஞரைப் போல இல்லை. இந்த அறிஞரோ இத்துறைகளில் சிறந்தே விளங்கினார். ஆனால் இவருக்கு நேரப் பற்றாக்குறையால் மருத்துவத்தைப் பற்றிப் படிக்கவில்லை. ஆனால் இறந்த அறிஞருக்கோ ஓரளவு மருத்துவத்தைப் பற்றித் தெரியும். மக்களைப் பற்றியும் ஓரளவு அறிந்திருந்தார். ஆகையால் இங்கு இறந்த குழந்தையின் தலையில் ஏற்பட்ட காயத்தின் தாக்கம் காரணமாகத்தான் அது வித்தியாசமான முறையில் கதைத்தது என்பதையும் குழந்தைக்கு ஏற்பட்ட வருத்தத்தையும் அறிந்து அதன் ஆதாரங்களைச் சேர்த்திருந்தார். ஆனால் துரதிர்ஷ்டமான முறையில் குழந்தையின் நோய் கடுமையாகிக் குழந்தை இறந்துவிட்டது. குழந்தைமீது கொண்ட பாசம் காரணமாகவே அவர் உங்களை எதிர்த்தார். ஆனால் அவர் உங்களை எதிர்த்தமைக்காக நீங்கள் வழங்கிய தண்டனை நியாயமானதுதான்.

படித்த அறிஞர்: என்னை மன்னித்து விடுங்கள், எனக்கு இருந்த நேரக்குறைவாலும் நான் எனது படிப்பில் செலுத்திய தீவிரக் கவனம் காரணமாகவும் சமுதாயத்தைப் பார்க்கவில்லை. மனநோய்களைப் பற்றி அறியவில்லை. நானும் பெரும்பான்மையுடன் இருந்தால், எனது கல்விக்கும் தொழிலுக்கும் பிரச்சனை இருக்காது என்பதற்காக, பெரும்பான்மையுடன் இணைந்து, இந்த உயிர்கள் வீணாகப் பலியாகக் காரணமாகிவிட்டேன். என்னை மன்னித்து விடுங்கள், என்னை மன்னித்துவிடுங்கள்...

பொதுமகன்3: (தொடர்ந்து) இந்த இளைஞன் பாராட்டப்பட வேண்டியவன். இந்தச் சமுதாயத்தில் உள்ள பெரியவர்கள் இந்தச் சமுதாயத்தைப் பற்றிய சரியான முடிவு எடுக்காதபோதே இந்த இளைஞன் முடிவுகளை எடுத்தான். அந்த வகையில் இந்த இளைஞன் பாராட்டப்பட வேண்டியவன். அந்த வகையில் இந்த இளைஞன் வழங்கிய மரணதண்டனை நியாயமானதுதான். ஆனால் இந்த இளைஞன் ஜனநாயகத்தைப் பற்றித் தவறாகப் புரிந்துகொண்டான். ஜனநாயகம் என்பது அனைவரும் பிரச்சனையைத் தெளிவாகப் புரிந்துகொண்டு முடிவு எடுப்பதில் தங்கியுள்ளது. ஜனநாயகம் என்பது சிறுபான்மையினரின் உணர்வுகளையும், அபிப்பிராயங்களையும் மதிப்பதுமாகும். அவர்களது சுதந்திரத்தினையும் ஏற்றுக் கொள்வதுமாகும். ஆனால் இந்த இளைஞன் இவற்றைப் புரிந்துகொள்ளப் போதிய அனுபவம் இருக்கவில்லை. சிறந்த ஆலோசனைகள் கிடைக்கவில்லை, எனவே நாம் அந்த இளைஞனை மன்னிப்போம்.

இளைஞன்: என்னை மன்னித்துவிடுங்கள்..... என்னை மன்னித்துவிடுங்கள்.

*பொதுமகன்3 பேசிக்கொண்டிருக்கும்போதே இளைஞன் பக்கமாக இருந்த மக்கள் படிப்படியாக இடம்பெயர்ந்து இவரது திசையில் வருகிறார்கள். பேச்சு முடிவில் அனைவரும் அவரது பக்கம் வந்துவிடுகிறார்கள். பின்னால் மன்னிப்பு வேண்டியபடி இளைஞனும் இணைகிறான்.*

சுவடுகள் (ஒக்/நவ'91)

*(மன்னிக்கவும்! யாவும் கற்பனையே!!)*



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம்

○ சில கேள்விகள் ○ ○ ○ சில பார்வைகள் ○

தோழமையின் சார்பில் ஈழப்பிரச்னை தொடர்பாக புரட்சிகர அமைப்புகளிடம் சில கேள்விகளைக் கேட்டிருந்தோம். மிகுந்த தோழமை உணர்வுடன் மக்கள் உரிமைக் கழகம், ஜனநாயக இளைஞர் அணி (DYL-செங்கொடி), மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், முற்போக்கு இளைஞர் அணி போன்ற அமைப்புகள் தங்கள் பதில்களை தோழமைக்குத் தந்து உதவினர். தோழமையின் சார்பில் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மக்கள் கலை இலக்கியக்கழகம் தோழமை அமைத்துள்ள இந்த மேடையைப் பயன்படுத்துவதில் பயனில்லை என்று கருதி ஒரு கடிதத்தை தந்துள்ளது. அக்கடிதம், எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே பிரசுரிக்கப்பட்டுள்ளது. தோழமை வாசகர்கள் தெரிந்து கொள்வதற்காக.

**□ 1. இலங்கைத் தமிழ்த்தேசிய இனச்சிக்கலுக்கு உரிய தீர்வாகத் தாங்கள் எதைக் கருதுகிறீர்கள்? தமிழீழம் எனத் தனியாகப் பிரிவதையா? பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய சுய நிர்ணய உரிமையையா? கூடுதல் அதிகாரங்கள் கொண்டமாகாண சுயாட்சியையா? அல்லது வேறு ஒன்றையா?**

**மக்கள் உரிமைக்கழகம் :**

இலங்கைத் தமிழ் தேசிய இன சிக்கலுக்கு, இலங்கை புதிய ஜனநாயகப் புரட்சியின் ஒரு அங்கமாக அமையும் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய தேசிய சுயநிர்ணய உரிமையே சரியான தீர்வாக அமையும் என்பதே எமது கருத்தாகும்.

**ஜனநாயக இளைஞர் அணி (DYL) :**

தேசிய சுயநிர்ணய உரிமை என்றாலே ஏகாதிபத்திய எதிர்ப்பு என்று பொருள். இயற்கையாகவும், விஞ்ஞான ரீதியாகவும் அமைந்துள்ள குறிப்பிட்ட பிரதேச மக்கள், சமூக அரசியல் பொருளாதாரம், கலாச்சாரம், மொழி ஆகியவற்றில் முன்னேறுவதற்கான உரிமைகளை இரு வகை சக்திகள் தடுக்கின்றன. ஒன்று-ஒரு தேசிய இனத்தின் மேல் இன்னொரு தேசிய இன அம்சங்களை திணிப்பது. இரண்டு-அந்த குறிப்பிட்ட தேசிய இனத்தின் காலாவதி ஆகிவிட்ட பூர்வீக அம்சங்களை நிலைநிறுத்த வேண்டும் என்ற அறிவியல் மறுப்பு நிலையாகும்.

இவ்விரு சக்திகளின் போக்குகளும் ஏகாதிபத்திய சந்தைகளுக்கு கூட்டாக சேவை புரிகின்றன. எனவே குறிப்பிட்ட தேசிய இன மக்கள் தேசிய சுயநிர்ணய உரிமை பெற வேண்டுமானால் ஏகாதிபத்தியங்களையும் பூர்வீக நிலப்பிரபுத்துவ அம்சங்களையும், எதிர்த்துப் போராடுவது, அவர்களின் உயிர்மூச்சாக இருக்க வேண்டும்.

ஈழத்தமிழர் பிரச்சனைக்கு தீர்வு என்பது அவர்களுக்கு விடுதலை தருவதாக இருக்க வேண்டும். உலக ஏகாதிபத்தியம் நவ காலனியத்திற்கு மாறியிருக்கிறது. நமது நாட்டிலும் மூன்றாம் உலக நாடுகளிலும் நவகாலனிய அரசுகளே உள்ளன. அது போல் இலங்கை பேரினவாத அரசும், நவ காலனிய அரசாக இருக்கிறது. ஏகாதிபத்தியங்கள் அந்த நாட்டில் கொள்ளையடிப்பதற்காக அந்த அரசு எல்லாத் தரப்பு மக்களையும் ஒடுக்கி வருகிறது. குறிப்பாக சிங்கள மக்களிலிருந்து உருவாகி வரும் எதிர்ப்பை சமாளிக்க சிங்கள மக்களின் நலன்களுக்கென்று தமிழ் தேசிய இன மக்களை ஒடுக்கி வருகிறது. அதிலிருந்து தான் தமிழ் மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் தீவிரமானது.

இந்த போராட்டத்திற்கு தலைமை தாங்கும் LTTE உள்பட எந்த போராட்டக் குழுவும், ஏகாதிபத்திய சுரண்டல் கொள்ளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யிலிருந்து ஈழத்தமிழ் மக்களை விடுதலை செய்வதற்கான, கொள்கைத் திட்டங்களைக் கொண்டவைகளாக இல்லை. ஏகாதிபத்திய அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி நட்புறவு கொண்டவைகளாக உள்ளன. பிரியும் ஈழத்தில் ஏகாதிபத்தியங்கள் கொள்ளையடிக்க துணைபுரியும் வகையில், தரகு முதலாளிகளாக இருக்க தயார் என்றால் எந்த இயக்கத்தையும் போராட்டத்தையும் ஏகாதிபத்தியங்களும் ஆதரிக்கத் தயாராக உள்ளன.

ஒரு சமுதாயத்தின் உற்பத்தி மற்றும் அதன் விநியோக உறவுகளிலிருந்து தோன்றும் முரண்பாடுகளின் விளைவாக அந்த சமுதாயத்தை எதிர்க்கும் மக்களின் போராட்டங்கள் உருவாகின்றன. இத்தகைய போராட்டங்களுக்கு இந்த சமுதாயத்தின் ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினர் தலைமை தாங்குவார்களேயானால் அந்த போராட்டம் இன்றுள்ள சமுதாயத்தை புதிய முறையில் பாதுகாப்பதிலே தான் முடியும். மக்களின் விடுதலை இலட்சியம் வெகுகாலத்திற்கு பின்னால் தள்ளப்பட்டு விடும் என்பதே வரலாறு கண்ட உண்மை.

ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் ஏகாதிபத்திய சுரண்டலினால் உருவானதாகும். முரண்பாட்டில் ஒன்று ஏகாதிபத்தியம் மக்களை கொள்ளையடித்துக் கொண்டிருப்பதாக இருக்கிறது. மற்றொன்று அந்த சுரண்டலை எதிர்த்து மக்கள் போராடி வெற்றிபெறுவதாக இருக்கிறது. இந்த இரு முரண்பாடுகளுக்கிடையில் ஒற்றுமையோ சமரசமோ ஏற்பட முடியாது.

இலங்கையில் இன்று வளர்ந்துள்ள இந்த முரண்பாட்டின் விளைவாக ஈழம் தனியாக பிரிந்து போவதின் மூலம் இதற்கு தீர்வுகாண முடியும், தீர்வுகாண வேண்டும். ஆனால் பிரிந்து செல்லும் ஈழம் ஏகாதிபத்திய சுரண்டலையும், நிலப்பிரபுத்துவ பூர்வீக அம்சங்களையும், தகர்த்து தூரயெறிந்து சுய தேசிய அடிப்படைகளை நிறுவக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என்பதே எங்களது அமைப்பின் நிலை.

**மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் :**

இலங்கை தமிழ் தேசிய இனச்சிக்கலுக்கு உரிய தீர்வாக எமது அமைப்பு கருதுவது தனித்தமிழ் ஈழநாடு மலர்வதே காரணம். இன்றைய சிங்களப் பேரினவாத, புத்த மதவாத இலங்கை அரசு, இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களை ஒடுக்குவதையே தனது வாழ்விற்கு ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இவ்வரசின் பேரினவாதக் கொள்கையால் சிங்கள இனத்திற்கும் ஈழத்தமிழ் இனத்திற்கும் இடையில் பூசல்களும், மோதல்களுமாக இருக்கிறது. இன்றுள்ள சூழ்நிலையில் இரு இனங்களும், இணைந்த வர்க்கப்போராட்டம் தடையின்றி நடப்பதற்கான வாய்ப்புகள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளன. ஈழத்தமிழினம் மற்றும் பிற தமிழ் பேசும் மக்களின் பொருளாதார வாழ்வின் சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. சிங்கள தேசிய இனத்தை சேர்ந்த பாட்டாளி மக்கள் பேரினவாதத்திற்கு இரையாகி, ஈழத்தமிழினம் மற்றும் பிற தமிழ் பேசும் மக்கள் மீது சிங்கள ஆளும்வர்க்கம் நடத்தும் இன ஒடுக்கு முறைகளுக்குத் துணைபோகிறது. இந்நிலையில் ஈழத் தமிழர்களின் தனிநாட்டுக்கான போராட்டம் நீதியானதும், உலகப்பாட்டாளி வர்க்க இயக்கம் ஆதரிக்கத் தகுந்ததும் ஆகுமென எமது அமைப்பு கருதுகிறது.

**முற்போக்கு இளைஞர் அணி:**

ஈழம் விடுதலை ஆவதும், விடுதலை பெற்ற ஈழம் சிங்கள பாட்டாளி மக்களின் விடுதலைக்காக தோழமையுடன் செயல்படுவதும், பின்னர் அவ்விரு இனமக்களும் விருப்பத்தின் பேரில் இணைந்தோ, பிரிந்தோ இருப்பது குறித்து தாங்களே முடிவெடுப்பது.

**☐ 2. போராளிகளை ஒடுக்காதே! இழிவு படுத்தாதே! எனத் தாங்கள் முழக்கமிட்டுள்ளீர்கள். இலங்கையில் பல போராளிக் குழுக்கள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. தாங்கள் எதை-எவற்றைப் போராளிக் குழுக்கள் எனக் கருதுகின்றீர்கள்?**

**ம.உ.க:**

இலங்கை இனவெறி பாசிச அரசையும், இந்திய விரிவாதிக்கத்தையும் எதிர்த்து

விடுதலைக்கு போராடும் அமைப்புகளையே போராளி குழுக்கள் எனக் கருதுகிறோம்.

**DYL:**

போராளிகளை ஒடுக்காதே! இழிவு படுத்தாதே! என்று எங்களது அமைப்பு முழக்கமிடவில்லை. தோழமை அமைப்புகள் தான் அவ்வாறு முழக்கமிட்டன. தமிழ்நாட்டில் உள்ள ஈழத்தமிழ் அகதிகளை வெளியேற்றாதே! விடுதலைப் போராட்டத்தை இழிவுப்படுத்தாதே! என்றுதான் எங்களது அமைப்பு சொல்கிறது.

ஏகாதிபத்திய எதிர்ப்பில் எந்தக் குழுவும் ஊன்றி நிற்காததால் நாங்கள் எந்தக் குழுவையும் போராளிக் குழுக்களாகக் கருதவில்லை.

**மஜஇக:**

ஈழத்தமிழினத்தின் விடுதலை யுத்தத்தில் ஊன்றி நின்று போராடிவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பையே போராளிக் குழுவாக எமது அமைப்பு கருதுகிறது. EPRLF, TELO, PLOT போன்ற குழுக்கள், இந்திய அரசின் மேலாதிக்கத்திற்குப் பணிந்து போவதுடன், இன்று இலங்கையில் நடக்கும் உள்நாட்டு யுத்தத்தில், பிரேமதாசாவுக்குத் துணை சென்று ஈழவிடுதலைக்கு எதிரான எதிர்ப்புரட்சிப் போராளிக் குழுக்களாக சீரழிந்துள்ளனர். NLFT போன்ற தமிழ் ஈழத்தை அங்கீகரிக்கும் குழுக்களும், PLFT, தீப்பொறி, தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை போன்ற சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கும் போராளிக் குழுக்களும் உண்டு.

**முற்போக்கு இளைஞர் அணி:**

இம்முழக்கத்தை எமது அமைப்பு வெளியிடவில்லை. இருப்பினும் ஈழத்தின் விடுதலைக்காக, இலங்கை அரசின் ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடுபவர்கள் யாராக இருந்தாலும் அதை போராளிக் குழுக்கள் என்றே கருதுகிறோம்.

☐ 3. **தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) குழுவை பாசிச அமைப்பு எனச் சிலர் கருதுகின்றனரே? அண்மையில் முரசொலி மாறன் சுபமங்களா பேட்டியில் இப்படிக் கூறியுள்ளாரே? தாங்கள் எப்படி கருதுகின்றீர்கள்?**

**மஉக:**

தமிழீழ விடுதலைப் புலிகள் (LTTE) அமைப்பு பிற புரட்சிகர, ஜனநாயக அமைப்புகள் பாலான அணுகுமுறையிலும், உள் அமைப்பு முறையிலும் ஜனநாயக விரோத பாசிச பண்புகளைக் கொண்டிருக்கிற (தெனினும் அது ஒரு) போராளிக் குழு என்பதே எமது நிலைப்பாடு ஆகும்.

**DYL:**

பாசிஸ்ட் அமைப்பா, இல்லையா என்று எங்கள் அமைப்பு இன்னும் வரையறுக்கவில்லை. ஆனால் LTTE யினர் செல்வாக்குள்ள பகுதிகளில் அவர்கள் மக்களுக்கு சிறிது அளவு கூட, ஜனநாயக உரிமைகளை அனுமதிக்க வில்லை என்பதை அங்கு நடைபெற்று வரும் நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றன.

**மஜஇக:**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஈழத்தமிழ் தேசிய இனத்தின் விடுதலை யுத்தத்தில் ஊன்றி நின்று போராடி வருகின்றது. ஆனால், அதே நேரத்தில், அவ்வமைப்பு ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகார முறைகளையே கடைப்பிடித்து வருகிறது. இந்திய மேலாதிக்கத்தை எதிர்த்து, ஈழத்தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்போருக்கும் பிற ஜனநாயக சக்திகளுக்கும்கூட ஜனநாயக உரிமைகளை மறுத்து வருகிறார்கள். இத்தகைய புரட்சிகர ஜனநாயக சக்திகளின் மீது அடக்கு முறையைத் தொடுத்து வருகின்றார்கள். ஒரு படையின் சர்வாதிகாரம்(புலிப்படையின் சர்வாதிகாரம்) என்ற பாசிசக் கொள்கையை செயல்படுத்துகிறார்கள். தங்கள் செல்வாக்கிற்கு உட்பட்ட பகுதிகளில் மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கவில்லை. மக்கள் கமிட்டிகளுக்கு அதிகாரம் என்ற ஜனநாயக ஆட்சி முறைக்கு மாறாக பழைய ஆளும் வர்க்க சக்திகளைச் சார்ந்தும், தனது படை பலத்தைக் கொண்டும், இலங்கைப் பாசிச

www.tamilarangam.net

ஆட்சிக்கு மாறாக ஒரு ராணுவ அதிகார வர்க்க ஆட்சி முறையைச் செயல்படுத்தி வருகின்றனர். நிலச்சீர்திருத்தம் மற்றும் உழைக்கும் மக்களின் வாழ்நிலைமைகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றைப்பற்றி கவலைப்படுவதே இல்லை.

இவ்வாறாக விடுதலைப் புலிகள் அமைப்பு ஜனநாயகமறுப்பு மற்றும் எதேச்சதிகார முறைகளைக் கடைப்பிடிப் பதின் காரணமாகவே, அதை இந்திய மேலாதிக்கவாதிகளுடனோ, அல்லது பாசிச தேசிய ஒடுக்கு முறையாளனான பிரேமதாச அரசுடனோ பாட்டாளிவர்க்க இயக்கம் சமப்படுத்திப் பார்க்கலாமா? கூடாது

விடுதலைப் புலிகள் தமிழ் ஈழ விடுதலைப் போரில் ஊன்றி நிற்கும்வரை, அவர்களை ஒடுக்கு முறை யுத்தத்தை நடத்துபவர்களுடன் சமப்படுத்திப் பார்க் காமல், தேசிய ஒடுக்கு முறையை எதிர்த்த போராட்டத்தில் அவர்களுடன் ஒற்றுமையும் அவர்களின் ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சதிகாரப் போக்குகளை எதிர்த்த போராட்டமும்தான் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் அணுகுமுறையாக இருக்க வேண்டும்.

ஏனெனில், ஈழத்தமிழ் தேசிய இன விடுதலைப்போரில் இரண்டு பிரச்சனைகள் உள்ளன. ஒன்று ஈழத்தமிழ் தேசிய இனத்தின் அரசியல் முன்னேற்றம். மற்றொன்று தேசிய இன விடுதலை யுத்தத் தில் விடாப்பிடியாக நிற்பது. இவை இரண்டும் பிரிக்க முடியாதவை. அரசியல் முன்னேற்றம் எந்த அளவிற்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவிற்கு அதிகமாக விடுதலைப் புரட்சிச் சக்திகள் யுத்தத்தில் விடாப்பிடியாக நிற்க முடியும். யுத்தத்தில் விடுதலைப் புரட்சி சக்திகள் எந்த அளவிற்கு விடாப்பிடியாக நிற்கிறதோ அந்த அளவிற்கு அரசியல் முன்னேற்றம் அதிகமாக இருக்கும். ஆனால் அடிப்படை யாக எல்லாமே விடுதலைப் புரட்சி சக்திகள் யுத்தத்தில் விடாப்பிடியாக ஊன்றி நிற்பதில் தான் தங்கி உள்ளது. புரட்சி யுத்தம் என்பது நஞ்சைப் போக்கும் ஓர் எதிர் நஞ்சு. அது எதிரியின் நஞ்சைப் போக்குவது மட்டு மல்ல, நமது சொந்த அழுக்கைக்கூட (விடுதலைப் போராளிகளின் அழுக்கைக் கூட) சுத்திகரிக்கிறது. நீதியான ஒவ்வொரு புரட்சி யுத்தத்திற்கும் பிரம்மாண்டமான ஆற்றல் உண்டு. அது பல பொருட்களை மாற்றக் கூடியது. அல்லது அவற்றின் மாற்றத்திற்கான பாதையைத் திறக்கக் கூடியது. எனவே விடுதலைப்புலிகள் விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்கும்வரை யில் மேற்கூறிய அணுகுமுறை கடைப் பிடிக்கப்படவேண்டும் எனக்கருதுகிறோம்.

முற்போக்கு இளைஞர் அணி:

இன்றைய சூழ்நிலையில் அதாவது, ஈழ விடுதலை போராட்டத்தை விடுதலைப் புலிகள் தலைமை தாங்கிக் கொண்டு செல்லும் இக்கட்டத்தில் வெளிப்படையாக விவாதிக்க வேண்டிய பிரச்சினை இதுவல்ல என்று கருதுகிறோம்.

□ 4. இலங்கைத்தமிழ் அகதிகள் பிரச்னையில் அரசாங்கம் கொண்டுள்ள மனிதாபிமானமற்ற நட வடிக்கைக்கு அப்பாற்பட்டு அவர்களுக்கு எந்தெந்த விதங்களில் உதவி செய்ய இயலும் எனக் கருது-கிறீர்கள்?

மஉக :

இலங்கைத் தமிழ் அகதிகளை அர-சாங்கம் முற்றிலும் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தி வருகிறது. அவர்களுக் குரிய உரிமைகளையும் சலுகைகளையும் மறுத்து வருகிறது. அவர்களை பலாத்கார மாக நாடுகடத்தும் முயற்சியில் ஈடு பட்டுள்-ளது.இதை மக்கள் மத்தியில்அம்பலப்படுத்தி வலிமைமிக்க மக்கள் எதிர்ப்பை உருவாக்கு வதுதான் அவர்களுக்கு நாம் செய்யக்கூடிய உதவிகளில் தலையாய்தாக இருக்கும்.

DYL :

ஈழத்தமிழ் அகதிகள் இங்கு தங்கியிருக்க சர்வதேச சட்டவிதிகள் உரிமையளிக் கின்றன. அது பறிக்கப்படுவதை எதிர்த்து நமது மக்களை திரட்டிப் போராடி அகதிகள் அந்த உரிமைகளை அடையச் செய்ய வேண்டும்.

மஜஇக :

ஈழத்தமிழினத்தின் விடுதலைக்காக உள்நாட்டு யுத்தம் நடந்துவரும் இந்தச்

www.tamilarangam.net

சூழ்நிலையில், ஈழத்தமிழர்கள் தமிழகத்தில் தஞ்சம் புக உரிமையுண்டு. ஐ. நா. சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் இப்படி தஞ்சம்புகும் அரசியல் அகதிகளுக்குரிய உரிமைகள் அளிக்கப்பட வேண்டும். கனடா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மன் போன்ற மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளிலும் ஈழத்தமிழர்களுக்கு இத்தகைய உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் தமிழ் நாட்டிலோ இவ்வுரிமைகள் மறுக்கப்படுகிறது. இந்திய ஆளும் வர்க்கங்களுக்குத் தேவைப்பட்டபோது, தங்களின் விஸ்தரிப்பு நலன்களுக்காக ஆயுதம், நிதி உள்ளிட்டு அனைத்து உதவிகளையும், இந்திய அரசு செய்தது. ஆனால் இப்போது ஈழத்தமிழ் அகதிகளை நாடுகடத்த முயற்சிக்கிறது. இந்த நிலையில், ஈழத்தமிழ் அகதிகளை நாடுகடத்துவதைக் கைவிடச் செய்வதும், அவர்களுக்குரிய அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவதுமே சிறப்பான உதவியாக இருக்கும். இவை அனைத்துக்கும் தமிழ் ஈழ விடுதலைப் போருக்கு தமிழகத்தை பின்புலம் ஆக்குவதே தீர்வாக இருக்கும்.

முற்போக்கு இளைஞர் அணி :

நாம் சுதந்திரக்காற்றை சுவாசிக்கும் பொழுதுதான் மற்றவர்களுக்கும் அக் காற்றை வீசமுடியும். சொந்த நாட்டில் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாம் எந்த அளவுக்கு நம்முடைய விடுதலைக்காக போராடுகிறோமோ அப்போதுதான் ஈழ அகதிகளுக்கும் கூட நம்முடைய உதவி என்பது உண்மையானதாகவும், உறுதியானதாகவும் இருக்கும். இதுவல்லாத மற்ற உதவிகள் என்பது வெறும் பொருளாதார ரீதியாகவோ (அல்லது) வெறும் மனிதாபிமான அடிப்படையாகவோ, மட்டுமே இருக்கும்.

☐ 5. இன்றைய இலங்கையில் தமிழ் தேசிய இனத்தின் அரசியல், ராணுவப் போராட்டங்கள், மூன்றாவது உலக நாடுகளின் குறிப்பாக இந்தியாவின் புதிய ஜனநாயகப் போராட்டத்துக்கு ஏதேனும் பங்களிப்புகளை ஆற்றியுள்ளதாகக் கருதுகிறீர்களா?

மஉக :

இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டிருப்பதும் ஈழத் தமிழர்களின் தொடர்ச்சியான ஆயுதப் போராட்டமும் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இந்திய இராணுவத்தைப் பற்றிய பிரமைகளை போக்கி இருப்பதுடன் ஆயுத போராட்டம்பற்றிய சாதகமான கருத்துச் சூழலையும் ஏற்படுத்தியிருக்கிறது. இது இந்திய புரட்சிகர, ஜனநாயக சக்திகளுக்கு சாதகமானதாகும். மேலும் இது தமிழகத்தில் தமிழ் தேசிய இயக்கத்துக்கு ஒரு தூண்டுதலையும் அளித்துள்ளது.

DYL :

இலங்கைத் தமிழர்கள் போல் இந்தியாவிலும், பிற நாடுகளிலும், தேசிய இன மக்கள் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு ஆளாகியுள்ளனர். இந்த சுரண்டலை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்டங்கள் நாம் மேலே குறிப்பிட்ட ஏகாதிபத்திய நிலப் பிரபுத்துவ அடிப்படைகளை எதிர்க்கும் வகையில் சரியான அரசியல் தன்மையோடு நடைபெறுமானால் அது பிறநாடுகளில் நடைபெறுகின்ற இத்தகைய போராட்டங்களுக்கு வலுவூட்டுவதாக இருக்கும். தவறான அரசியல் தன்மையில் நடைபெறுமானால் தவறான விளைவுகளை ஏற்படுத்தும். ஈழப் போராளிக் குழுக்கள் தவறான அரசியல் தன்மை கொண்டவை என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறோம்.

மஜஇக :

தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் இந்திய புதிய ஜனநாயக போராட்டத்திற்கு பின்வரும் பங்களிப்புகளைத் தந்துள்ளது.

(அ) இந்திய 'அமைதிப் படையின்' ராணுவ நடவடிக்கைகளை முறியடித்ததானது இந்திய அரசின் விஸ்தரிப்பு வாதத்திற்குத் தரப்பட்ட மரண அடியாகும்.

(ஆ) உலகத் தமிழினக் காவலர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்ட திக., தி.மு.க, அதிமுக, ஆகிய சமரசவாதக் கட்சிகளின் முகத்திரையைக் கிழிக்கப் பயன் பட்டுள்ளது.

www.tamilarangam.net

(இ) தமிழகத்தில் புரட்சிகர இயக்கங்களிடையே தேசிய இனப்பிரச்சனை குறித்த ஒரு ஆழமான விவாதத்தை எழுப்பியுள்ளது.

(ஈ) ஒரு சிறிய படை, ஒரு பெரிய படையை வெல்ல முடியும் என்பதை, மீண்டும் நிருபித்துள்ளது. இன்றும் மக்கள் யுத்தப் பாதையே ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைக்கு உகந்த பாதை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

முற்போக்கு இளைஞர் அணி

ஆம்.

☐ 6. இந்திய அரசின் ஆதிக்க விரிவு க்கு எதிராகவும் மாநில அரசின் அடக்குமுறைக்கு எதிராகவும் போராளிகளை இழிவுபடுத்தாமலும் அகதிகளை வெளியேற்றாமலும் இருக்க தாங்கள் எடுத்த நடவடிக்கைகள் யாவை?

மஉக:

1983 ஜூலை கலவரம் நடந்த போதிருந்தே இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகவும், இந்திய அரசின் ஆதிக்க விரிவாக்கம் மற்றும் அடக்குமுறைக்கு எதிராகவும் நாங்கள் தொடர்ந்து மக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்கள், சிறு வெளியீடுகள், சுவரொட்டிகள், கருத்தரங்குகள், பொதுக்கூட்டங்கள், பேரணிகள், தெருமுனைக்கூட்டங்கள், கலைநிகழ்ச்சிகள், மாநாடு போன்று பல்வேறு வடிவங்களில் இயக்கங்கள் நடத்தி வருகிறோம். இவ்வழியில் பல லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் எமது கருத்துக்களை எடுத்துச் சென்றுள்ளோம். 1983 ஜூலை கலவரத்தை அடுத்து ஈழமக்கள் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட இயக்கமும், 1987 ஜனவரியில் புரட்சிகர ஈழப் போராளிகளுக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட இயக்கமும், அதே ஆண்டில் ஜூலையில் இந்திய இராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டதைக் கண்டித்து நடத்தப்பட்ட இயக்கமும் 1988ல் இலங்கையில் இந்திய ராணுவத்தின் அட்டூழியங்களைக்கண்டித்து நடத்தப்பட்ட இயக்கமும் 1989ல் இந்திய ராணுவம் இலங்கையிலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் முன்வைத்து நடத்தப்பட்ட மாநாடும், 1991ல் அகதிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், போராளிகளை இழிவுபடுத்துவதை எதிர்த்தும் நடத்திய இயக்கமும் நாங்கள் நடத்திய இயக்கங்களில் குறிப்பிடத்தக்கவையாகும். இவை அனைத்தும் மாநில அளவில் திட்டமிட்டு நடத்தப்பட்ட பெரும் பிரச்சார இயக்கங்களாகும். இவை தவிர உள்ளூர் அளவில் நடத்தப்பட்ட இயக்கங்களும், திருமண நிகழ்ச்சிகளைக்கூட இதற்கான பிரச்சார இயக்கங்களாக கட்டமைத்ததும் உண்டு. இத்தகைய இயக்கங்களில் இலட்சக்கணக்கான துண்டுப்பிரசுரங்களும், பத்தாயிரக்கணக்கான சுவரொட்டிகளும் வெளியிடப்பட்டுள்ளன. இவ்வியக்கங்களில் புரட்சிகர இளைஞர் முன்னணி, மக்கள் கலாச்சாரக் கழகம், புரட்சிகர விவசாயிகள் மற்றும் விவசாய தொழிலாளர் முன்னணி போன்ற எமது தோழமை அமைப்புகள் மட்டுமின்றி மற்ற பிற ஜனநாயக சக்திகளையும் பல சமயங்களில் இணைத்துக் கொண்டுள்ளோம். இறுதியாக 1991ல் நடத்தப்பட்ட இயக்கத்தில் 300க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு அதில் அறுபதுக்கு மேற்பட்டவர்கள் மீது (124ஏ போன்ற) தேச துரோக வழக்கு தொடுக்கப்பட்டிருப்பதும் ம.உ.க பொதுச்செயலர் பி.வி.ஆர் உட்பட 6 பேர் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலிடப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

DYL

ஆரம்ப முதலே எங்களது அகில இந்திய அமைப்பு இந்திய அரசின் விஸ்தரிப்பு கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் எதிர்த்துப் போராடி வருகிறது. தமிழகத்திலும் எங்களது பாதை இதுவே ஆகும்.

மஜஇக:

ஈழத்தமிழர்களின், சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் 1983லிருந்து தேசிய விடுதலை யுத்தம் என்ற வடிவம் எடுத்த காலம் துவங்கி, ஈழத்தமிழின விடுதலைப் போரை ஆதரித்தும், இந்திய அரசின் விஸ்த்தரிப்புவாதத்தை எதிர்த்தும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறோம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. *1983-1987*-உள்நாட்டு யுத்த காலத்தில், ஈழவிடுதலைப் போரை ஆதரித்தும், இந்திய ராணுவத் தலையீட்டு முயற்சியை அம்பலப் படுத்தியும் பிரச்சாரம் மேற்கொண்டோம். திம்புப் பேச்சுவார்த்தை நாடகத்தை அம் பலப்படுத்தினோம்.

2. *1987-1989* ஆக்கிரமிப்பு எதிர்ப்பு யுத்தகாலம்:

ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின் துரோகத்தனத்தை அம்பலப்படுத்தினோம். இந்தியப் படையை இலங்கையிலிருந்து திரும்பப் பெறப்பட வேண்டுமென பிரச் சாரம் செய்தோம்.

3. *1990-1991:* மீண்டும் உள்நாட்டு யுத்த காலம். ஈழத்தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்கக் கோரி கையெழுத்து இயக்கம் நடத்தினோம். விடுதலைப் புலிகளின் மருத்துவத் தேவைக் கென மக்களிடம் நிதியைத் திரட்டினோம். (விடுதலைப்புலிகள் இதுவரை அந்நிதியை எங்களிடமிருந்து பெற்றுக் கொள்ள வில்லை )

தற்போது, ஈழ விடுதலைக்கு எதிராகவும் பிரேமதாச அரசுக்கு ஆதரவாகவும் செயற் படும் நோக்கில், ஈழப்போராளிகள் மீது அவதூறையும், அடக்குமுறையையும் கட்ட விழ்த்திவிட்டு ஈழத் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறை யுத்தத்தின் இரண்டாம் முனையைத் துவக்கி பிரேமதாச அரசுக்குத் துணைபோகும் இந்திய அரசை அம்பலப் படுத்தி வருகிறோம். சர்வதேச விதிப்படி அகதிகளுக்கும், போராளிகளுக்கும் கிடைக்கவேண்டிய உரிமைகளையும் உதவி களையும் பெற்றுத்தருவது அவசியம் எனக் கருதுகிறோம்.

**முற்போக்கு இளைஞர் அணி:**

இங்கே குறிப்பிடத் தேவையில்லை எனக் கருதுகிறோம்.

☐ **7. இந்திரா காங்கிரசு, இடது - வலது போலிக் கம்யூனிஸ்டுகள், பாரதிய ஜனதாக் கட்சி, ஜனதாதளம் போன்ற தேசிய கட்சிகள் அரசின் ஒடுக்குமுறைக்கு நேரடியான ஆதர வாகவும் தி.மு.க., தி.க. போன்ற மாநிலக் கட்சிகள் மறைமுக ஆதரவாகவும் இருக்கும் இன்றைய அரசியல் சூழலில், புரட்சி கர, ஜனநாயக சக்திகளின் இது குறித்த ஒரு கூட்டுச் செயற்பாடு தேவை எனக் கருது கிறீர்களா? அப்படியாயின் அது எப்படி அமைய வேண்டும்? அதற்குத் தாங்கள் முன் முயற்சி எடுப்பீர்களா?**

**ம உ க**

கூட்டுச்செயற்பாடு அவசியமே. இது குறித்து புரட்சிகர ஜனநாயக சக்திகள் கூடி விவாதித்து அதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

**DYL**

புரட்சிகர அமைப்புகள், தமிழீழ விடு தலை போராட்ட பிரச்சனைகளில் மாறு பட்ட கருத்துக்களை கொண்டுள்ளன. முரண் பாடான பிரச்சனைகளை இரண்டாவது இடத்தில் வைத்து, உடனடி பிரச்சனை களில் உடன்பாடு காணக் கூடியவை களில் ஒன்று சேர்ந்து கூட்டுநடவடிக்கை களில் ஈடுபட முடியும். இத்தகைய முயற்சி களில், எங்களது அமைப்பு முன்கை எடுத்து வந் திருக்கிறது என்பதை "தோழமை" வாசகர் களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்

**மஜஇக**

நீங்கள் குறிப்பிடும் இன்றைய அரசியல் சூழலில், புரட்சிகர ஜனநாயக சக்திகளின் கூட்டுச்செயற்பாடு அவசியம்தான். இந்திய அரசின் விஸ்தரிப்பு வாத நோக்கத்திற்கு எதிராகவும், ஈழவிடுதலைப் போராளிகளின் அடக்கு முறைக்கு எதிராகவும், போராளி களையும் அகதிகளையும் நாடு கடத்து வதை எதிர்த்தும் அக்கூட்டுச் செயற்பாடு அமைய முடியும் எனக் கருதுகிறோம். ஆனால் இத்தகைய குறைந்தபட்ச கூட்டுச் செயற்பாட்டிற்குக்கூட பின்வரும் கருத்து வேறுபாடுகள் தடைகளாக இருக்கின்றன.

(அ) விடுதலைப் புலிகள் பாசிச சக்தி கள். அச்சக்திகள் ஒழிக்கப்பட்டு, மாற்று சக்தி யுத்தத்தில் தலையெடுத்தால்தான் ஈழ விடுதலைப் போரை ஆதரிக்க முடியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(ஆ) தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கை என்பது தேசியவாதம் – இனவாதம் ஒட்டு மொத்த இலங்கைப் புரட்சியே தீர்வு.

முற்போக்கு இளைஞர் அணி:
கேள்வியில் முரண்பாடு உண்டு.

புதிய கலாச்சாரம்

45 : செங்குன்றம் சாலை, வில்லிவாக்கம்.

அன்புடையீர், உங்கள் கடிதம் கிடைத்தது. தமிழீழப் பிரச்சினை தொடர்பாக நீங்கள் உருவாக்க விரும்பும் விவாத மேடையில் பங்கேற்றுக் கருத்து கூறுவதற்கென 7 கேள்விகளைத் தொகுத்துக் கொடுத்துள்ளீர்கள். தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்த 3-வது கேள்வியில் அந்த அமைப்பைப் "பாசிச அமைப்பு" என்று முரசொலிமாறன் கூறியிருப்பதை மேற்கோள்காட்டி அது குறித்து கருத்து கேட்டுள்ளீர்கள்.

ஈழப்பிரச்சினையைத் தனது அரசியல் பிழைப்புக்கான கருவியாகப் பயன்படுத்திய இன்று தமிழக அரசின் ஒடுக்குமுறைக்கு மறைமுகமாக ஆதரவு தருகின்ற (பார்க்க உங்கள் கேள்வி எண்-7) தி. மு. க. வின் பிரமுகர்களில் ஒருவரான மாறன் சொல்லித்தான் புலிகளின் பாசிசம் குறித்து உங்களுக்குத் தெரிய வந்திருக்கிறது.

ஈழப் பிரச்சினை குறித்தும், புலிகள் குறித்தும் சாய்வேதுமில்லாமல் நேர்மையாக ஆய்வு செய்பவர்களையும் மாறன், சோ வகையறாவில் சேர்த்து ஆய்வுகளைக் குறுக்கு வழியில் முடக்கும் முயற்சியே உங்கள் கேள்வியில் தொனிக்கிறது. புற யதார்த்தத்தை விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்யும் கண்ணோட்டத்தையே நீங்கள் இழந்து விட்டீர்கள் என்பதையே இது காட்டுகிறது.

எனவே, இந்த மேடையைப் பயன்படுத்துவதில் பயனில்லை என நாங்கள் கருதுகிறோம்.

அன்புடன்,

(ஆசிரியர், 'புதிய கலாச்சாரம்')
21-11-1991

இரவல் தூண்டில்

தொகுப்பு: கடலோடிகள்

முகவரி: THOONDIL
Südasien Büro
Grosse Heim Str. 58
4600 Dortmund 1
Germany

தொலைபேசி:
(0231) 136633

சந்தா

ஜேர்மனி:
6 மாதங்கள் = 20,- டி.எம்
1 வருடம் = 38,- டி.எம்

ஐரோப்பா:
6 மாதங்கள் = 25,- டி.எம்
1 வருடம் = 48,- டி.எம்

அமெரிக்கா, ஆபிரிக்கா, ஆசியா:
1 வருடம் = 65,- டி.எம்

அவுஸ்ரேலியா:
1 வருடம் = 75,- டி.எம்

தபாற்கணக்கு இல. 308 07 468
Postscheckamt Dortmund
BLZ 440 100 46

இத் தொகுப்பில் பிரசுரமாகும் கருத்துகள் யாவற்றுடனும் தொகுத்தவர்களுக்கு முழு உடன்பாடு இருக்கவேண்டுமென்பதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

புதிய ஜனநாயகக்கட்சியின் 2வது தேசியமகாநாட்டு பத்திரிகை அறிக்கை. (மே'91)

# உடனடி வேலைத்திட்டம்

1. தற்போதைய ஜனநாயக விரோத, தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, தேச விரோத யூ. என். பி. பெரு முதலாளித்துவ—பேரினவாத—பாசிஸ்ட் அரசை எதிர்த்து நிற்கக் கூடிய சகல அரசியல் கட்சிகளையும்—ஸ்தாபனங்களையும் உள்ளடக்கிய பொது முன்னணி ஒன்றினை உறுதியான பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பி அதன் தலைமையில் மக்களை அணிதிரட்டி சக்தி மிக்க வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பது. இப் பொது வேலைத்திட்டத்தின் பிரதான அம்சம் தேசிய ஜனநாயகத்தையும்—சுயநிர்ணய உரிமையையும் வென்றெடுத்து நிலைநாட்டுவதாக அமையவேண்டும்.

2. சக்திமிக்க வெகுஜனப் போராட்டங்களின் மூலம் ஆளும் அரங்கிலிருந்து அகற்றப்படும் யூ. என். பி. அரசாங்கத்தின் இடத்தை நீதியானதும் நியாயமானதுமான சுதந்திர பொதுத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஓர் ஜனநாயக அரசாங்கத்தினால் நிறைவு செய்வதற்கு ஏற்ற வழிவகைகளை ஏற்படுத்தல்.

3. ஜனநாயகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மக்கள் பிரதிநிதிகள் ஓர் தேசிய நிர்ணய சபை மூலமாக இன்றைய அரசியலமைப்புக்குப் பதிலான புதிய அரசியலமைப்பை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும். அவ்வரசியலமைப்பானது தற்போதைய நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதி முறையை ஒழித்து மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு அதி உயர் அதிகாரத்தை வழங்கக்கூடிய வகையில் அமைவதுடன், மக்கள் நலன், தேசநலன், தேசிய இனங்களுக்கிடையிலான இணக்க நலன் அடிப்படையில் சகல மக்களுக்கும் சமத்துவத்தையும், ஜனநாயகத்தையும், அடிப்படை மனித உரிமைகளையும் உத்தரவாதம் செய்யக்கூடிய வகையில் உருவாக்கிக் கொள்ளப்படவேண்டும்;

4. தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம், அரசியல் அமைப்புக்கான ஆறாவது திருத்தச் சட்டம், அத்தியாவசிய சேவைகள் சட்டம், மாணவர்களை ஒடுக்கும் நோக்கிலான பல்கலைக்கழகச் சட்டங்கள் போன்ற அனைத்து அடக்குமுறைச் சட்டங்களையும் உடன் அகற்ற வேண்டும். அத்துடன் சகல வகை சார்ந்த துணைப் படைகளும்—விசேஷப் படைகளும் கலைக்கப்பட்டு. ஆயுதப் படைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அளவுக்கு மீறிய அதிகாரங்கள் அனைத்தும் இல்லாது ஒழிக்கப்படல்வேண்டும். அதேவேளை சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்கள், இராணுவ முகாம்கள், விசாரணைக் கூடங்கள் அனைத்திலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்தல் வேண்டும்.

5. 1977ஆம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்றுவந்த ஜனநாயக—தொழிற்சங்க விரோத நடவடிக்கைகளையும், அடிப்படை மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கான ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டு பாரபட்சமற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ் விசாரணையில் முழுநாட்டிலும் ஏற்கனவே கொல்லப்பட்டும், காணாமற்போயுள்ளவர்களின் விபரங்கள் வெளியிடப்படுவதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்குப் போதிய நஷ்ட ஈடும், புனர்வாழ்வும் வழங்கப்படவேண்டும். அதேவேளை குற்றவாளிகள் எத்தரத்தை உடையவர்களாக இருப்பினும் அவர்கள் தண்டிக்கப்படல் வேண்டும்.

6. தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான ஓர் இடைக்காலத் தீர்வு முத்தரப்புப் பேச்சுவார்த்தை அடிப்படையில் காண்பதற்கு சகல நடவடிக்கைகளும் தாமதமின்றி முன்னெடுக்கப்படல்வேண்டும். இத் தீர்வானது சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பூரண அதிகாரம் கொண்ட வடக்கு-கிழக்கு இணைந்த பிரதேசத்திற்கான பிரதேச சுயாட்சியாகவும்; முஸ்லீம் மக்கள், இந்திய வம்சாவழி மக்கள் ஆகியோருக்கான சுயாட்சி உள்ளமைப்புக்களாகவும் கொண்டிருப்பதுடன் இவை அரசியலமைப்பு வாயிலாக உறுதியையும் உத்தரவாதத்தையும் கொண்டிருக்கவேண்டும், மேலும் வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த கோர யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு உயிர், உடமை, இருப்பிடம், தொழில் இழப்புக்களைப் பெற்ற அனைத்து மக்களுக்கும் பூரண நஷ்டஈடும்—தகுந்த புனர்வாழ்வையும் குறுகிய கால எல்லைக்குள் வழங்கி அவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்வது



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

7. வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தி, அதற்கேற்ற சம்பள உயர்வை வழங்கி தொழிலாளர்கள், ஊழியர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உழைக்கும் மக்களினதும வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திப் பாதுகாக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்வது.

8. திட்டமிட்ட பாரிய கைத்தொழில், விவசாய அபிவிருத்திக்கு உரிய அடிப்படைகளை உருவாக்கி முன்னெடுக்கும் அதேவேளை விவசாய, சிறுகைத்தொழில் உற்பத்திகளுக்கு ஊக்கமும் முதன்மையும் கொடுத்து விவசாயிகளுக்கும் சிறு கைத்தொழிலாளர்களுக்கும் உரிய வாய்ப்புக்களை வழங்கவேண்டும். தொழில், விவசாய அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள் சகல பிரதேசங்களுக்கிடையிலும் சமத்துவ அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும். இதன்மூலம் வெளிநாடுகளுக்கு நமது மனித வளம் ஏற்றுமதி செய்யப்படுவது ஆகக் குறைந்த மட்டத்துக்கு வருவதுடன் திட்டமிட்ட தேசிய பொருளாதார வளர்ச்சியானது துரிதகதியில் விருத்திபெற்று பலம்பெற உரியநடவடிக்கைகளை ஏற்படுத்துவது.

9. ஏற்றுமதி இறக்குமதி உட்பட அந்நிய பல்தேசிய நிறுவனங்களின் தாராள சுரண்டலுக்கும், திட்டமிட்ட தேசிய பொருளாதார வளர்ச்சியைச் சிதறடித்து நமது நாட்டைத் தமது சந்தையாக வைத்திருக்கும் அவர்களின் திறந்த பொருளாதாரக் கதவு கொள்கைக்குத் தகுந்த கட்டுப்பாட்டை விதித்து நமது தேசிய பொருளாதாரத்தை ஸ்திரமாக்கி முன்னெடுப்பது. விவசாய உற்பத்திகளும் சிறுகைத்தொழில் முயற்சிகளும் – கொள்வனவு, விற்பனை யாவும் கூட்டுறவு அமைப்புகளை உருவாக்கி அவற்றின் ஊடாக செயற்படுவது. இதற்கென ஒரு திட்டமிட்ட தேசிய பொருளாதாரக் கொள்கையை வகுத்துக்கொள்வது.

10. தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி தேசிய வாழ்வில் அரசாங்க, தனியார் துறையினரைவிட தனி ஒரு பிரிவினராக நடத்தப்படும் தற்போதைய முறையை ஒழித்து; அவர்களது பிரஜாவுரிமை, வாக்குரிமை என்பனவற்றை நடைமுறையில் பூரணப்படுத்தி; நிலம் வழங்கப்படுவதில் காட்டப்படும் திட்டமிட்ட பாகுபாட்டை ஒழித்து; மற்றும் வசிப்பிடம், சுகாதாரம், கல்வி வாய்ப்புக்களை மிகுந்த அக்கறையுடன் விரிவுபடுத்தி விருத்தி செய்தல்.

11. நாட்டின் மொத்த எண்ணிக்கையில் அரைப்பங்கினராக விளங்கும் பெண்கள் சகல துறைகளிலும் இரண்டாந்தர அடிப்படையிலான பாகுபாடுகளுக்கும் ஒடுக்கல்களுக்கும் எதிராக உரிய நடவடிக்கைகளை எடுத்து பெண்களின் நலவுரிமைகளுக்கும் சமத்துவ நிலைக்கும் உறுதியான செயற்பாட்டினை முன்னெடுப்பது.

12. விஞ்ஞான தொழில் நுட்பக் கல்வியை மாவட்டங்கள்தோறும் விருத்தி செய்து அவற்றை தொழில், விவசாய விருத்தியுடன் இணைத்து தேசிய பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது. அத்துடன் சமூகநல விருத்திக்குப் பங்காற்றக்கூடியதும்; சமூக உணர்வையும்–மனித நேயப் பண்புகளை வளர்க்கக்கூடியதுமான திட்டமிட்ட தேசிய கல்விக் கொள்கை ஒன்றினை இன வர்க்க, மத, மொழி, சாதி, பால், பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் வகுத்து முன்னெடுத்தல். சகல இன மக்களினதும் கலாசார விழுமியங்களின் நல்லம்சங்கள் அனைத்தையும் பாதுகாத்து புதிய சூழலில் விருத்திசெய்து முன்னெடுக்கக்கூடிய தேசிய கலாசாரக் கொள்கை ஒன்றினை வகுத்து முன்னெடுப்பதுடன் நச்சுத்தனம் கொண்ட விதேசிய கலாசார ஊடுருவல்கள் அனைத்தையும் தடுத்து நிறுத்துவது.

13. எண்பதுகளில் இருந்து தனியார் மயமாக்கல் கொள்கை அடிப்படையில் அரசாங்க, கூட்டுத்தாபன கூட்டுறவுத்துறைகளில் இருந்து வெளிநாட்டு–உள்நாட்டு பெருமுதலாளிகளிடம் கையளித்த சகல துறை நிறுவனங்களும், நிலங்களும் மீளக் கையேற்கப்பட்டு அவை தகுந்த முறையில் இயங்க வழிவகை செய்யப்படவேண்டும். அதே வழியில் கல்வி, சுகாதாரம், மருத்துவம் போன்ற அத்தியாவசிய துறைகளில் புகுத்தப்பட்ட தனியார் லாப நோக்குடைய நடைமுறை ஒழிக்கப்பட்டு மக்கள் நலன் சார்ந்த நடைமுறைக் கொள்கை பின்பற்றப்படல் வேண்டும்.

4. இன்றைய சமூகநிலை (சாதி, இன, பிரதேச, வர்க்கம்) காரணமாக நாட்டின் எப்பகுதியிலேனும் காணப்படும் பின்தங்கிய மக்கள் பிரிவினர் உரிய முறையில் இனங்காணப்பட்டு அவர்களது சமூக, பொருளாதார, கல்வி மேம்பாட்டிற்கான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

15. தற்போதைய யூ. என். பி. அரசு பின்பற்றிவரும் முற்றிலும் மேற்குலகு சார்ந்த வெளியுறவுக் கொள்கையானது கைவிடப்பட்டு உறுதியான நடுநிலைக் கொள்கை பின்பற்றப்படல்வேண்டும். அதேவேளை உலக மேலாதிக்க சக்திகளுக்கு எதிராகவும், பிராந்திய மேலாதிக்க நோக்கத்திற்கு எதிராகவும் விழிப்புடன் இருக்க வேண்டும், உலகின் அடக்கி ஒடுக்கப்படும் மக்களுடனும்– அவர்களின் விடுதலைப் போராட்டங்களுடனும் மிக நெருக்கமாக ஐக்கியப்படுவதுடன் இந்திய உபகண்டத்தின மக்களுடனும் அவர்களது சமூக நீதிக்கும் விடுதலைக்குமான போராட்டங்களுடனும் எமது ஒருமைப்பாட்டை வளர்த்துக்கொள்ளல் வேண்டும். அதே வேளைமூன்றாம் உலக நாடுகளின் ஐக்கியத்திற்கும்அவர்கள் தமது தேசிய சுதந்திரம் தேசிய பொருளாதார வளர்ச்சி என்பவற்றுக்காக முன்னெடுக்கும் சகல முயற்சிகளுக்கும் போராட்டங்களுக்கும் எமது வெளியுறவுக் கொள்கையானது பக்கபலமாக இருப்பதை உறுதிசெய்து கொள்ளல்வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# செவ்வாய்க்கிழமை மதியத்தூக்கம்

மணற்பாங்கான பாறைகளால் ஆன அதிர்வுறும் சுரங்க வழியிலிருந்து புகைவண்டி வெளிவந்தது ; சீராக அமைந்த முடிவே இல்லாத வாழைத்தோட்டங்களைக் கடக்க ஆரம்பித்தது ; காற்று ஈரமாக மாறியது ; அவர்களால் கடற்காற்றை உணர முடியவில்லை. மூச்சுத்திணறவைக்கும் முழு வேகத்தில் பெட்டியின் ஜன்னல் வழியாக புகை வந்தது. பசும் வாழைத்தார்கள் ஏற்றப்பட்ட மாட்டு வண்டிகள், தண்டவாளங்களுக்கு இணையாகச் செல்லும் குறுகியபாதையில் போய்க்கொண்டிருந்தன. பாதைக்கு அப்பால், விவசாயம் செய்யப்படாமல் அங்கங்கே இருந்த நிலப்பகுதிகளில் மின் விசிறிகள் உள்ள அலுவலகங்களும் சிவப்பு செங்கற்களாலான கட்டடங்களும் இருந்தன. பனை மரங்களுக்கும் ரோஜாச் செடிகளுக்கும் இடையே, நாற்காலிகளும் சிறிய வெள்ளை மேஜைகளும் உள்ள மாடிவீடுகள் இருந்தன. காலை பதினேரு மணி; வெப்பம் இன்னும் ஆரம்பிக்கவில்லை.

'ஜன்னலை மூடிவிடு ; புகைக்கரி உன் முடியில் நிறையச் சேர்ந்துவிடும்' என்று அப்பெண் சொன்னாள். அந்தச் சிறுமி முயற்சி செய்தாள் ; ஆனால் துரு இருந்ததால் ஜன்னல் கதவு நகரவில்லை.

அந்தத் தனிமையான மூன்றும் வகுப்புப் பெட்டியில் அவர்கள் இருவர் மட்டுமே பயணிகள். ஜன்னல் வழியாகத் தொடர்ந்து புகை வந்து கொண்டிருந்ததால், அந்தச் சிறுமி அவர்கள் கொண்டு வந்திருந்த தின்பண்டங்கள் உள்ள பிளாஸ்டிக் பையையும், செய்தித்தாளில் சுற்றப்பட்ட மலர்க்கொத்தையும் கீழே வைத்துவிட்டு தன் இடத்தை விட்டு நீங்கினாள். ஜன்னலிலிருந்து தள்ளிதன் அம்மாவைப் பார்க்கும் வகையில் எதிர்த்த இருக்கையில் அமர்ந்தாள். அவர்கள் இருவரும் கடுந்துன்பத்தை வெளிப்படுத்தும் எளிய துயர்ச் சின்ன உடையிலிருந்தனர்.

அந்தச் சிறுமிக்கு பன்னிரெண்டு வயது. முதல் முறையாக புகைவண்டியில் பிரயாணம் செய்கிறாள். கண் இரப்பைகள்மேல் தெரிந்த நீல இரத்தக் குழாய்களும் குருமார்களின் நீண்ட உள் அங்கி மாதிரி தைக்கப்பட்டிருந்த ஆடையை அணிந்த அவளின் மென்மையான, சிறிய, சீராக இல்லாத உடம்பும் அந்தச் சிறுமிக்குத் தாயாக இருப்பதை விடவும் கூடுதலான வயதை அப்பெண்ணுக்குக் கொடுத்தன. முதுகு இருக்கையின் பின்புறம் இருக்கமாகப் பொருந்தும் வண்ணம் அமர்ந்து அப்பெண் பிரயாணம் செய்து கொண்டிருந்தாள். மெருகூட்டப்பட்ட தோலால் ஆன பையைத் தன் மடிமீது வைத்து இரண்டு கைகளாலும் பிடித்துக்கொண்டிருந்தாள். வறுமைக்குப்பழக்கப்பட்ட ஒருவரின் மனச்சான்றுள்ள சாந்தம் அப்பெண்ணிடம் இருந்தது.

பன்னிரெண்டு மணிக்கு வெப்பம் ஆரம்பித்தது. நகரமில்லாத ஒரு நிலையத்தில் தண்ணீர் நிரப்பிக்கொள்வதற்காகப் புகைவண்டி பத்து நிமிடங்கள் நின்றது. வெளியே, வாழைத்தோட்டங்களின் புதிரான அமைதியில், நிழல்கள் தெளிவாகத் தெரிந்தன. ஆனால் ரயில் பெட்டிக்குள்ளிருந்த சலனமற்ற காற்று பதனிடப்படாத தோல் மாதிரி வாடை வீசியது. புகைவண்டி நின்றது. அப்பெண்ணின் தலை ஆடியது. அவள் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். சிறுமி தன்னுடைய பாதணிகளை அகற்றினாள். பின் மலர்க்கொத்தை நீரில் நனைப்பதற்காக அவள் கழிவறைக்குச் சென்றாள்.

அவள் தன் இருக்கைக்குத் திரும்பியபோது அவள் தாய் சாப்பிடுவதற்குக் காத்திருந்தாள். ஒரு துண்டு பாலாடைக்கட்டி, பாதி மக்காச்சோள அடை, கேக் அகியவற்றை அந்தப் பெண் தன் மகளுக்குக் கொடுத்துவிட்டு, அதே அளவு தின்பண்டங்களை பிளாஸ்டிக் பையிலிருந்து தனக்காக எடுத்துக் கொண்டாள். அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது புகைவண்டி ஓர் இரும்புப் பாலத்தை மிக மெதுவாகக் கடந்தது. முன் கடந்த நகரங்களைப் போலுள்ள பிறிதொரு நகரத்தைக் கடந்தது புகைவண்டி. ஆனால் இந்நகரத்தின் சந்தைக் கூடுமிடத்தில் கூட்டம் இருந்தது. கடும்வெய்யிலில் ஓர் இசைக்குழு ஓர் இனிய ராகத்தை வாசித்துக் கொண்டிருந்தது. நகரத்தின் அடுத்த பக்கத்தில் வறட்சியால் பிளக்கப்பட்ட நிலப்பகுதியின் ஆரம்பத்தில் வாழைத் தோட்டங்கள் முடிந்திருந்தன.

அப்பெண் சாப்பிடுவதை நிறுத்திவிட்டுச் சொன்னாள். 'உன் பாதணிகளை அணிந்துகொள்' சிறுமி வெளியே பார்த்தாள். புகைவண்டி மீண்டும் வேகம் எடுக்க ஆரம்பித்தது. பாழ் நிலத்தைத் தவிர அவளால் வேறெதை



www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-யும் பார்க்க முடியவில்லை. கேக்கின் கடைசித்துண்டை பையில் போட்டுவிட்டு பாதணிகளை அணிந்துகொண்டாள். தாய் அவளுக்கு ஒரு சீப்பைக்கொடுத்து, 'தலைவாரிக் கொள்' என்றாள்.

சிறுமி தலைவாரிக் கொண்டிருந்த போது புகைவண்டி ஒலிகொடுக்க ஆரம்பித்தது. கழுத்திலிருந்த வியர்வையையும், முகத்திலிருந்த எண்ணெய்ப்பசையையும் அப்பெண் தன் விரல்களால் துடைத்தாள். தலைவாருவதை அச்சிறுமி நிறுத்திய போது, முன் வந்த நகரங்களைவிட பெரிதாகவும் சோகமாகவும் இருந்த ஒரு நகரத்தின் எல்லையிலிருந்த வீடுகளை புகைவண்டி கடந்து கொண்டிருந்தது.

'ஏதாவது செய்யவேண்டுமென்று தோன்றினால் இப்போதே செய்து கொள். பிறகு, தாகத்தினால் நீ இறக்க வேண்டியிருந்தாலும் எங்கேயும் எந்த பானத்தையும் நீ குடிக்கக்கூடாது. எல்லாவற்றுக்கும் மேல் நீ அழக்கூடாது' என்று அப்பெண் தன் மகளிடம் சொன்னாள்.

சிறுமி தலையசைத்தாள். பழைய பெட்டிகளின் சப்தம், புகைவண்டியின் ஊதல் ஒலி ஆகியவற்றோடு ஓர் உலர்ந்த வெப்பமான காற்று ஜன்னல் வழியாக உள்ளே வந்தது. உணவின் மீதத்தோடு பிளாஸ்டிக் பையை மடித்து அதைத் தன் கைப்பையில் போட்டாள் அப்பெண். பிரகாசமான ஆகஸ்ட்மாத செவ்வாய்க்கிழமையில், அந்நகரத்தின் முழுக் காட்சியும் ஒரு கணத்துக்கு ஜன்னல் வழியாக ஒளிர்ந்தது. நனைந்த செய்தித்தாளில் பூக்களைச் சுற்றிக் கொண்டு அச்சிறுமி ஜன்னலிலிருந்து சற்று விலகி தன் அம்மாவை வெறித்து நோக்கினாள். பதிலாக ஒரு கனிவான பார்வையைப் பெற்றாள். புகைவண்டி ஒலி கொடுக்க ஆரம்பித்து வேகத்தைக் குறைத்தது. சிறிது நேரம் கழித்து நின்றது.

நிலையத்தில் ஒருவருமில்லை. தெருவின் அடுத்தபக்கம், வாதுமை மரங்களால் நிழலூட்டப்பட்ட பக்க நடைபாதையில் கூட்டுச் சூதாட்டக்கூடம் மட்டும் திறந்திருந்திருந்தது. நகரம் வெம்மையில் மிதந்து கொண்டிருந்தது. அப்பெண்ணும் சிறுமியும் புகைவண்டியிலிருந்து இறங்கி, புறக்கணிக்கப்பட்ட நிலையத்தைக் கடந்து தெருவின் நிழலான பகுதியை நோக்கி நடந்தனர். நிலையத்தின் நடைபாதை ஓடுகள் ஊடே வளர்ந்திருந்த புற்களால் பிளவுபட்டிருந்தன.



பாதுகாப்பான வாதுமை மர நிழலிலேயே நடந்து, மக்களின் தூக்கத்தைக் கலைக்காமல் அப்பெண்ணும் சிறுமியும் நகரத்திற்குள் நுழைந்தனர். அவர்கள் வட்டாரத்திருச்சபை குருமாரின் வீட்டிற்குச் சென்றனர். கதவின் மேலிருந்த இரும்பு வலையைத் தன் விரல் நகங்களால் அப்பெண் பிறாண்டினாள். ஒரு நிமிடம் காத்திருந்து விட்டு மீண்டும் பிறாண்டினாள். உள்ளே ஒரு மின் விசிறி ரீங்கரித்துக் கொண்டிருந்தது. காலடி ஓசை எதையும் அவர்கள் கேட்கவில்லை. கதவு 'கீறீச்' என்ற சப்தத்துடன் திறக்கப்பட்டதையும், உடனே எச்சரிக்கை உணர்வுடன் ஒரு குரல் 'யாரது?' என்று கேட்டதையும் அவர்களால் தெளிவாகக் கேட்க முடியவில்லை. இரும்புவலை வழியாகப்பார்க்க அப்பெண் முயற்சித்தாள்.

'எனக்கு மதகுருவைப் பார்க்கவேண்டும்' என்றாள் அப்பெண்.

'அவர் தூங்கிக்கொண்டிருக்கிறார்'

'மிகவும் அவசரம்' அப்பெண் வலியுறுத்தினாள். அவள் குரலில் ஒரு தீர்மானம் தெரிந்தது. ஓசையின்றி கதவு லேசாக திறக்கப்பட்டது. இரும்பின் வண்ணத்தோடு கூடிய தலைமயிரையும், வெளுத்த தோலையுமுடைய ஒரு குண்டான பெண் வெளியே வந்தாள். கனத்த லென்ஸுகளுக்குப் பின்னால் அவள் கண்கள் மிகச்சிறியதாகத் தென்பட்டன. கதவை முழுதாகத் திறந்து 'உள்ளே வாருங்கள்' என்று சொன்னாள்.

பூக்களின் பழைய வாசனை வியாபித்திருந்த ஓர் அறைக்குள் நுழைந்தனர். அந்த வீட்டுப்பெண் அவர்களை ஒரு மரபெஞ்சு அருகே அழைத்துச் சென்று அவர்களை அதில் உட்காருமாறு சைகை செய்தாள். சிறுமி உட்கார்ந்தாள். இரண்டு கைகளிலும் கைப்பையைப் பிடித்த வண்ணம், தன்னை மறந்த நிலையில் அவளின் தாய் நின்று கொண்டிருந்தாள். மின் விசிறியின் ஓசையை மீறி எந்த சப்தமும் கேட்கவில்லை.

அறைக்கோடியிலிருந்த கதவு வழியாக அந்த வீட்டுப் பெண் மீண்டும் தோன்றினாள். 'மூன்று மணிக்குப்பிறகு உங்களை அவர் வரச்சொல்கிறார்' என்று தாழ்ந்த குரலில் அவள் சொன்னாள். 'ஐந்து நிமிடங்களுக்கு முன்தான் அவர் படுத்தார்.'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'மூன்றரை மணிக்கு ரயில் கிளம்புகிறது' என்ருள் வந்தவள். அது ஒரு சிறிய தன்னுறுதி வாய்ந்த பதில். ஆனல் அவள் குரல் இனிமையாகவும் அடங்கிய தொனியோடும் இருந்தது. வீட்டுப்பெண் முதல் முறையாகச் சிரித்தாள்.

'சரி' என்ருள்.

இரண்டு மணியிருக்கும். அரைத்தூக்க நிலையால் அழுத்தப்பட்டு நகரமே நண்பகல் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தது. கடைகள், நகர அலுவலகங்கள், அரசுப்பள்ளிக்கூடம் ஆகியவை பதினேரு மணிக்கு மூடப்பட்டு, புகைவண்டி திரும்பிப்போகும் நேரமான நான்கு மணிக்கு சற்று முந்திவரை திறக்கப்படுவதில்லை. புகைவண்டி நிலையத்திற்கு எதிராக உள்ள மதுக்கூடமும், கூட்டுச் சூதாட்டக்கூடமும் இணைந்த உணவு விடுதி, சந்தைக்கூடத்தின் ஒருபக்கம் இருந்த தந்தி அலுவலகம் ஆகியவை மட்டுமே திறந்து வைக்கப்பட்டிருந்தன. வாழைத்தோட்ட நிறுவனத்தின் மாதிரியில் பெரும்பாலும் கட்டப்பட்டிருந்த வீடுகள் உட்பக்கமாய் பூட்டப்பட்டு, அவைகளின் திரைச்சீலைகள் இறக்கி விடப்பட்டிருந்தன. சில வீடுகளில் வசிப்பவர்கள் மிகுந்த வெப்பத்தின் காரணமாக உள்முற்றத்தில் அமர்ந்து சாப்பிட்டனர். மற்றவர்கள், வாதுமை மரநிழலில், நாற்காலிகளை சுவரோரம் போட்டு அமர்ந்துகொண்டு தெருவிலேயே நண்பகல் தூக்கத்தில் ஆழ்ந்திருந்தனர்.

அறைக்கோடிக்கதவு மீண்டும் மூடப்பட்டபோது, அப்பெண் தன் மகளருகில் உட்கார்ந்தாள். குறுகலான காத்திருக்கை அறை வறியதாகவும் சுத்தமாகவும் இருந்தது. அறையைப் பிரித்த மர அடைப்பின் அடுத்த பக்கம் மெழுகுத் துணி விரிக்கப்பட்ட ஓர் அலுவல் மேஜை இருந்தது. மேஜையின்மேல் ஒரு பழங்கால டைப்ரைட்டரும், ஒரு மலர் ஜாடியும் இருந்தன. அடுத்து வட்டாரத் திருச்சபையின் பதிவேடுகள் இருந்தன. திருமணமாகாத ஒருபெண்ணல் சீராக நிர்வகிக்கப்படும் ஓர் அலுவலகம் அது என்பதைக்காண முடிந்தது.

அறைக்கோடிக்கதவு திறக்கப்பட்டது. கைக்குட்டையால் தன் கண்ணடியைத் துடைத்துக்கொண்டு மதகுரு வெளிப்பட்டார். அவர் தன்னுடைய கண்ணடியை அணிந்த பிறகுதான், கதவைத்திறந்த பெண்ணின் சகோதரர் தான் அவர் என்பது தெரிய வந்தது.

'நான் உங்களுக்கு எவ்வகையில் உதவமுடியும்?' என்று அவர் கேட்டார்.

'சுடுகாட்டின் சாவி'. என்ருள் அப்பெண்.

மலர்களை மடியில் வைத்துக்கொண்டு, பெஞ்சின் அடியில் கால்களைக் குறுக்காக வைத்து சிறுமி அமர்ந்திருந்தாள். மதகுரு சிறுமியைப் பார்த்தார்; பின் அப்பெண்ணைப் பார்த்தார். பிறகு ஜன்னலில் கம்பிவலை வழியாக பிரகாசமான மேகங்களற்ற வானத்தைப் பார்த்தார்.

'இந்த வெப்பத்தில்......' என்ருர் அவர். 'சூரியன் மறையும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டும்.'

அப்பெண் அமைதியாக தலையசைத்தாள். மதகுரு மரத் தடுப்பின் மறுபக்கம் சென்ருர். அலமாரியிலிருந்து மெழுகுத் துணி உறையோடுள்ள ஒரு புத்தகம், ஒரு மர எழுதுகோல் கைப்பிடி, ஒரு மைப்புட்டி ஆகியவற்றை எடுத்துக்கொண்டு மேஜையருகில் அமர்ந்தார். தலையில் அவருக்கு இல்லாதிருந்த முடியை ஈடுகட்டுவது போலவும் அதற்கு மேலாகவும் அவர் கைகளில் நிறைய முடி இருந்தது.

'எந்தக் கல்லறையைப் பார்க்கப்போகிறீர்கள்?' என்று கேட்டார்.

'கார்லோஸ் செண்ட்டுனேவின் கல்லறையை' என்ருள் அப்பெண்.

'யார் அது?'

'போனவாரம் இங்கு கொல்லப்பட்ட திருடன்தான் அவன்' என்று அதே குரலில் சொன்னுள் 'நான் அவனுடைய தாய்.'

மதகுரு அவளை ஆராய்ந்தார். அமைதியான சுய கட்டுப்பாட்டோடு அவள் அவரை உற்றுப்பார்த்தாள். மதகுரு வெட்கப்பட்டார். அவர் தன் தலையைத் தாழ்த்திக்கொண்டு எழுத ஆரம்பித்தார். அந்தப்பக்கத்தை எழுதி நிரப்பியவுடன், அவர் அப்பெண்ணை அவளைப்பற்றிய விவரங்களை சொல்லச் சொன்னுர். அவள் தன்னைப்பற்றி துல்லியமான விவரங்களைத் தயக்கமின்றி வாசிப்பதை போல சொன்னுள். மதகுரு வியர்க்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஆரம்பித்தார். சிறுமி தன்னுடைய இடது பாதணியின் கொக்கியை அவிழ்த்து விட்டு, குதிகாலை வெளியே எடுத்து அதை பெஞ்சின் சட்டத்தின்மீது வைத்தாள். வலது குதிகாலை -யும் அதே மாதிரி செய்தாள்.

போனவாரம் திங்கட்கிழமை காலை மூன்று மணிக்கு அங்கிருந்து சில வளாகங்கள் தள்ளி அது ஆரம்பித்தது. உபயோகமற்ற பல உதிரிச்சாமான்கள் நிரம்பிய ஒரு வீட்டில் வசித்து வந்த ரெபக்கா என்னும் தனியான ஒரு விதவை, வெளிப்பக்கத்திலிருந்து முன்கதவைத் தள்ளித்திறக்கும் முயற்சி -யில் யாரோ ஈடுபடும் சத்தத்தைக் கேட்டாள். அச்சத்தம் மழைத்தூறலின் ஒலியையும் மீறிக்கேட்டது. அவள் எழுந்தாள்; கர்னல் ஆர்லியானோ ப்யூண்டியா காலத்திற்குப்பின் யாருமே சுடாத ஒரு பழங்காலத்து ரிவால்வாரைத் தன்னுடைய சிறிய தனியறையில் துருவித்தேடி எடுத்துக்கொண்டு, விளக்குகளைப் போடாமல் புழங்கும் அறைக்குள் சென்றாள். பூட்டில் ஏற்படும் ஒலியைக் காட்டிலும், இருபத்தெட்டு வருடத் தனிமை அவளும் உண்டாக்கிய பயம், கதவு இருக்குமிடத்திற்கும், பூட்டின் உயரத்திற்கும் அவளை அதிகம் பழக்கப்படுத்தியிருந்தது. ஆயுதத்தை இரண்டு கைகளாலும் இறுகப்பிடித்தபடி கண்களை மூடிக்கொண்டு துப்பாக்கியின் விசையிழுப்பை நெரித்தாள். அவள் வாழ்வில் முதல் தடவையாக அப்போதுதான் துப்பாக்கி -யால் சுட்டாள். துப்பாக்கி வெடித்தபின் உடனடியாக, துத்தநாகக் கூரையின்மேல் விழும் மழைத்தூறலின் ஒலியைத் தவிர வேறு எதையும் அவள் கேட்கவில்லை. பின் உலோகத் தனமான ஒரு மோதல் சப்தத்தை சிமெண்ட்டுத்திண்ணையில் கேட்டாள்; இனிமையான ஆனால் பயங்கரமாக முற்றும் சோர்வடைந்த குரலொன்று தனிந்த தொனியில் 'ஐயோ, அம்மா,' என்று அலறியதையும் கேட்டாள். அந்த வீட்டின் முன் இறந்து கிடந்தவனைக் காலையில் பார்த்தபோது அவன் மூக்கு தூள்தூளாக சிதறியிருந்தது; வண்ணக்கோடுகள் போட்ட சணல் துணியிலான சட்டையும், கயிறு ஒன்றை பெல்ட்டிற்குப் பதிலாகவும் அணிந்திருந்தான். அவன் பாதணிகள் அணிந்திருக்கவில்லை. நகரத்தில் யாருக்கும் இவனைத் தெரியவில்லை.

எழுதி முடித்தபோது, 'எனவே அவன் பெயர் கார்லோஸ் ஸெண்டனோ' என்று மதகுரு முணு முணுத்தார்.

'ஸெண்டனோ ஆயலா' என்றாள் அந்தப்பெண்.

'அவன் என்னுடைய ஒரே மகன்'

மதகுரு தனியறைக்குச் சென்றார். கதவின் உட்புறத்தில் துருப்பிடித்த இரண்டு பெரிய சாவிகள் தொங்கின; சிறுமி, அவளுடைய தாய் சிறுமியாக இருந்த போது நினைத்த மாதிரி, அச்சாவிகள் புனித பீட்டரின் சாவிகள் என்று நினைத்தாள்; மதகுரு கூட ஏதோ ஒரு கட்டத்தில் அப்படித்தான் நினைத்திருக்க வேண்டும் அவர் அச்சாவிகளை எடுத்து, திறந்திருந்த நோட்டுப்புத்தகத்தின் மீது வைத்து, அப்போது தான் எழுதி முடிக்கப்பட்ட பக்கத்தின் ஓர் இடத்தைத் தன் ஆட்காட்டி விரலால் காண்பித்து 'இங்கே கையெழுத்திடு' என்று அப்பெண்ணிடம் கூறினார்.

கைப்பையை கைக்குக் கீழ் வைத்துக் கொண்டு அப்பெண் தன் பெயரைக் கிறுக்கினாள். சிறுமி பூக்களைப் பறித்துக் கொண்டு, கால்களைத் தேய்த்து நடந்து மர அடைப்பை அடைந்தாள்; தன் தாயைக் கவனத்துடன் பார்த்தாள். மதகுரு பெருமூச்சு விட்டார்.

'அவனைச் சரியான வழிக்குத்திருப்ப நீ எப்போதும் முயற்சித்ததில்லையா?'

'அவன் மிகவும் நல்ல மனிதன்'

(தொடரும்)

---

ஆங்கிலத்தில் :
**J. S. பெர்ன்ஸ்டைன்**

தமிழில் :
**ஆர். சிவகுமார்**

---

மீட்சி புக்ஸ்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




01.01.1992 (வீ) * * * *
இனப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு இ.தொ.கா. தலைவ ரென்ற ரீதியிலேயே யோசனைகளை முன்வைத் தேன். இவை சனாதிபதியின் யோசனைகளல்ல - தொண்டமான்

இனப்பிரச்சினைத் தீர்வுக்குத் தொண்டமான் முன்வைத்துள்ள ஆலோசனைகள் குறித்து பௌத்த மத நிறுவனங்களும், அதன் தலைவர்களும், கல்வியறிவு பெற்ற கனவான்களும் வெளியிட்டுவரும் பேரினவாத உணர்வுகொண்ட கருத்துகள் எரிகிற வீட்டுக்கு எண்ணெய் ஊற்றுவது போன்றதாகும் - பு.ஜ.கட்சி

02.01.1991 (வீ) * * * *
இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த எகலியகொட மருத்துவமனைக்கு பிரசவத்திற்கென அனுமதிக்கப்பட்டிருந்த தமிழ்ப்பெண்ணொருவர் மறுநாள் பிரசவ வார்ட்டுக்கு அருகிலுள்ள மரமொன்றில் தொங்கிக்கொண்டிருந்தார். இது கொலையா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

03.01.1991 (வீ) * * * *
யாழ்ப்பாணத்திற்கு எதிரான முழுமையான நடவடிக்கையை இராணுவம் நினைத்தால் முழு கனரக வாகனங்கள் சகிதம் ஆரம்பிக்க முடியும். ஆனால் பெருமளவு அப்பாவிமக்கள் பாதிக்கப்படுவார்கள். அப்பொழுது மனித உரிமைக் குரல்கள் ஒலிக்கும். பின்னர் சர்வதேச ரீதியில் கண்டனக் குரல்கள் பிறக்கும் - உயர் இராணுவ அதிகாரி.

வடக்கிலும், கிழக்கிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் துயரங்களையும், வேதனைகளையும் புரிந்து கொண்டு அவர்களது தேவைகளையும், உரிமைகளையும் கொண்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் தவறினால் நாடு துண்டாடப்படுவதையோ, இரண்டாகப் பிளவுபடுவதையோ தவிர்க்கமுடியாது - பிரேமதாசா

04.01.1991 (வீ) * * * *
இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண நாம் ஆவலாக உள்ளோம். ஆனால் இராணுவத்தினர் எந்த வகையிலாவது யாழ்குடாநாட்டைக் கைப்பற்ற முனைந்தால் அதனை அனுமதிக்க மாட்டோம் - புலிகள்

06.01.1992 (வீ) * * * *
புலோப்பளை, சிலாவத்தை பகுதிகளில் குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல்களை நடாத்தியதில் குடிசைகள், ட்ராக்டர்கள், கடைகள் சேதமடைந்ததுடன் 17 வயது யுவதியொருவரும் கொல்லப்பட்டுள்ளார்.

மீளக்குடியமர்த்துதல் என்பதன் பேரில் தம்பலகாமம் அகதி முகாமிலிருந்து 10 மாதங்களுக்கு முன்னர் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்ட 600 தமிழ்க் குடும்பங்கள் தற்போது உணவும், இருப்பிடமும் இன்றி அவலப்படுகின்றனர்.

12.08.1990 அன்று திருக்கோயில் அகதிமுகாமுக்குள்ளேயே வந்து வேற்றின ஆயுதபாணிகளால் 56 பேர்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டனர். அரைகுறைக் காயங்களுடன் அம்பாறை, சம்மாந்துறை அரசினர் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டவர்களும் திரும்பிவரவில்லை. இதில் மிஞ்சியவர்களை இப்போது அவர்களது சொந்தக் கிராமங்களில் மீண்டும் குடியமர்த்த அரசபடைகள் முயன்று வருகின்றன.

07.01.1992 (வீ) * * * *
இலங்கையரசுடன் மாத்திரம் நடாத்தும் பேச்சுவார்த்தைகளினால் தீர்வு ஒன்றும் ஏற்படமாட்டாது. சகல தமிழ் இயக்கங்களும் பிரபாகரன் தலைமையில் ஒன்றிணைந்து இலங்கை-இந்தியா-தமிழர் குழுக்கள் என்ற ரீதியில் பேச்சுவார்த்தை நடாத்தும்போது தான் பயனுள்ள முடிவு கிட்டும் - ஈரோஸ் இரத்தின சபாபதி

யாழ் மாவட்டத்தில் விசர் நாய்க் கடிக்குள்ளாகி 14 பேர் மரணமாகியுள்ளார்கள்.

08.01.1992 (வீ) * * * *
இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் குறித்து புதுடில்லியில் இலங்கை வெளியுறவு அமைச்சர் இந்திய வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தியபோது 1987 யூலை இலங்கை-இந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திய ஒப்பந்தத்தையே நடைமுறைப்படுத்த வேண்டுமென இந்தியத் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டு பிரிவினையையும், தமிழீழத்தையும் நாம் ஆதரிக்கவில்லை. ஐக்கிய இலங்கை என்ற நிலைப்பாட்டினையும், ஒற்றையாட்சி முறையையும் நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம் - இ.தொ.கா

யாழ்ப்பாணத்தில் வயிற்றோட்ட நோய் பரவுகிறது. இந் நோய் காரணமாக மேலும் நால்வர் மரணமாகியுள்ளனர்.

நாட்டில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் பயங்கரமான போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கே அதிமுன்னுரிமை கொடுக்கப்படவேண்டும். போர் முடியும் வரை சமாதானப் பேச்சுவார்த்தைகளும், அர்த்தமற்ற கொண்டாட்டங்களும் நிறுத்தப்பட வேண்டும் - களனி பல்கலைக் கழக வேந்தர்

முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் ஐ.தே.க.வில் ஒரு அங்கமாக இருந்து செயற்படுகிறார் - மீன்பிடித் துறை கடல்வள அமைச்சர்.

09.01.1992 (வீ) * * * *

யாழ் மருத்துவபீடம் மூடப்படுவதை ஆட்சேபித்து வடக்கில் வெகுசனப் போராட்டம் நடத்துவதில் கல்வி நிறுவனங்களும், பொதுஸ்தாபனங்களும் ஈடுபட்டு வருகின்றன.

டட்லி-செல்வா ஒப்பந்தம், இலங்கை -இந்திய ஒப்பந்தம், திம்பு பேச்சுவார்த்தை யோசனைகள் போன்றவற்றில் இடம்பெற்ற அம்சங்களைவிட தொண்டமானின் சமரசத் திட்டத்தில் கூடுதலான அதிகாரங்களை உள்ளடக்கிய யோசனைகள் உள்ளன. 36 அம்சங்கள் கொண்ட தொண்டமானின் திட்டத்தில் கல்வி, காணி, சட்டம், ஒழுங்கு ஆகியவற்றில் நன்கு வரவேற்கத்தக்க யோசனைகள் இடம்பெற்றுள்ளன. இதனால் அமைச்சருடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்த எமது இயக்கம் தயாராகவுள்ளது - புலிகள்

இன்றைய அரசினதும், உலக வங்கியினதும் புதிய வேலைத் திட்டத்தின் கீழ் பெருந்தோட்டக் கைத் தொழிற்துறை முழுவதும் சுதந்திர வர்த்தக வலயத்திற்குச் சமானமான கடும் தொழிலாளர் விரோத சட்ட திட்டங்களின் கீழ் கொண்டு வரப்படும். இதன்மூலம் தோட்டத் துறையில் பிரித்தானிய காலத்தில் இருந்ததை விட மோசமான சுரண்டல் ஏற்படும். இன்றைய அரசின் கீழ் தொழிலாளரின் தொழில், வாழ்க்கைத்தரம் கடும் வெட்டுக்குள்ளாகியுள்ளது. உலக வங்கியினதும், சர்வதேச நாணய நிதியத்தினதும் கட்டளையின் பேரில் அரசாங்கம் அரசதுறைத் தொழில்களை 25%ஆக வெட்டவும், அத்துறைகளை உள்நாட்டு, வெளிநாட்டுக் கம்பெனிகளிடம் கையளிக்கவும் செயற்படுத்தி வருகின்றது.

தோட்டமொன்றில் றப்பர் பால் வெட்டிக்கொண்டிருந்த தொழிலாளி ஒருவரை பொலிஸ் கடத்தியுள்ளது.

10.01.1992 (வீ) * * * *

புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற போர்வையின்கீழ் ஊவாப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்கள் கைதுசெய்யப்படுவதை ஆட்சேபித்து பசறை, லுணுகலை, மடுல்சீமை தோட்டத் தொழிலாளர் சுமார் 22 ஆயிரம் பேர் வேலைநிறுத்தத்தில் குதித்துள்ளனர். அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்று சாயம் பூசப்பட்டு கைது செய்யப்பட்டு, துன்புறுத்தப்படும் நிலைமைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படவில்லையென்றால் ஊவா மாகாணம் முழுவதும் வேலைநிறுத்தம் தொடரும் எனவும் இவர்கள் எச்சரித்துள்ளனர்.

30வீதம் நிலப்பரப்பையும், மூன்றில் இரு பங்குடைய கரையோரப் பகுதியையும் கொண்ட வடக்கு -கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்து சகல துறைமுகங்களையும், விமானத்துறைகளையும் தாரைவார்த்து அவற்றை தமிழ்மக்களின் சொத்துக்கள் என ஒப்படைப்பதே தொண்டமானின் ஆலோசனையாகும். வடக்கு - கிழக்கு இணைப்பை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். தொண்டமானின் யோசனைகள் நாட்டு மக்கள் அனைவருக்கும் துரோகம் இழைப்பதாகும். எனவே தொண்டமானை அமைச்சர் பதவியிலிருந்து ஒதுக்கிவிடுமாறு சனாதிபதியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஐ.தே.க உறுப்பினர்களின் ஆதரவுடன் முலட்டியனை பிரதே சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

12.01.1992 (வீ) * * * *

இராணுவ உடையணிந்தவர்களால் தோட்டப்பகுதியில் தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளப் பணம் கொள்ளையடிக்கப்பட்டதையடுத்து இராணுவம், பொலிஸ், அதிரடிப்படை என அரசபடைகள்

www.tamilarangam.net

தோட்டப்பகுதிகளில் குவிக்கப்பட்டுள்ளன. வீடு வீடாகத் தேடுதல் வேட்டைகள் நடைபெறுகின்றன.

13.01.1992 (வீ) ✳✳✳✳
அரச அதிகாரிகளுக்கான தங்குமிட கட்டிடங்களை அமைப்பதற்காக வவுனியா நகருக்கு அருகே தேக்கவத்தை கிராமத்தில் குடியிருக்கும் 32 குடும்பங்களையும் அங்கிருந்து வெளியேறிவிடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஆலையடி வேம்பு கிராமம் சுற்றி வளைக்கப்பட்டு விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டவர்களில் 20 பேர் அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் ஏற்பட்ட இராணுவத் தாக்குதல்களினால் வடபகுதியில் நூற்றுக்கு மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளதாகவும், நூற்றுக்கு மேற்பட்ட 12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் நெருப்புக் காய்ச்சல், வயிற்றுளைவு, மூளைக் காய்ச்சல் போன்ற வற்றுக்காளாகி இறந்துள்ளதாகவும் சுகாதார வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 25க்கு மேற்பட்டவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

14.01.1992 (வீ) ✳✳✳✳
புலிகளுடன் தொடர்புள்ளவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு விடுதலையான தோட்டத் தொழிலாளி ஒருவர் தடுப்புக் காவலிலிருந்தபோது தாக்கப்பட்டதானால் காயங்களுக்குள்ளாகி பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த வேளை மரணமானார்.

16.02.1992 (வீ) ✳✳✳✳
கடந்த ஆண்டு படையினரால் 4,274 பேர் கொல்லப்பட்டுள்ளதாக கூட்டுப்படைகள் தலைமையகம் அறிவித்துள்ளது.

பிரேமதாசா அரசு கடைப்பிடித்து வரும் கொள்கைகள் நாட்டுமக்களுக்கு மேலும் பொருளாதார அரசியல் சுமைகளை ஏற்படுத்தப் போகின்றன. மக்களின் வாழ்க்கைத் தரம் மீதான தாக்குதல் தீவிரமடைந்துள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் பாவனை பொருட்களின் விலைகள் வானளாவ உயர்ந்துவிட்டன. 1992 வரவு-செலவுத்திட்ட யோசனைகள் குளவந்த வர்க்கத்தினருக்கே சாதகமாக உள்ளன. அதிகரித்துவரும் பணவீக்கம் பாரிய நெருக்கடியை உருவாக்கப்போகிறது. இந்தத் தவறான கொள்கைகளுக்கு முடுதிரையாக வடக்கு-கிழக்கு யுத்தத்தை அரசு பயன்படுத்துகிறது. கேளிக்கைகள் மூலம் மக்களின் கவனத்தை திசைதிருப்புகிறது.

17.01.1992 (வீ) ✳✳✳✳
இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசின் மதிப்பீடு எமக்குச் சாதகமாகவேயுள்ளது - வெளி விவகார அமைச்சின் செயலாளர்

வடக்கு-கிழக்குப் பிரச்சினை ஒரு தேசியப் பிரச்சினையாகும். அதனை ஜே.வி.பி. பயங்கரவாதத்துடன் ஒப்பிடமுடியாது. அதேபோல தெற்குப் பயங்கரவாதத்தை ஒழித்தது போல வடக்கு-கிழக்குப் பயங்கரவாதத்தை ஒழித்துவிடவும் முடியாது. இப் பிரச்சினைக்கு துட்டகைமுனு காலத் தீர்வு ஒத்துவராது. வடக்கு-கிழக்கு யுத்தம் பொருளாதார பிரச்சினையை அடிப்படையாகக்கொண்டே ஆரம்பமானது - ச.மா.சபை எதிர்க்கட்சித் தலைவர்

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக் கும்வரை இராணுவ நடவடிக்கை தொடரவேண்டும். அதுவரையில் அரசியல் தீர்வு பற்றி ஆலோசிக் கக் கூடாது. வடக்கு-கிழக்கில் சாந்தி, சமாதானம், அமைதியை இராணுவத்தினரால் மட்டுமே ஏற்படுத்தமுடியும். இன்று எமது இராணுவம் அதையே வடக்கு-கிழக்கில் செய்கிறது. இறுதியில் இராணுவம் வெற்றிபெறும் - ச. மா.சபை ஆளும் கட்சி அங்கத்தவர்

20.01.1992 (வீ) ✳✳✳✳
சுன்னாகம், உடுவில் பகுதிகளில் வசித்துவந்த 28 முஸ்லீம்கள் புலிகளினால் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்நாட்டில் வடக்கு-தெற்கு மக்களிடையே ஐக்கியம் நிலவுவதாகக் கூறுவது வடக்கு-தெற்கு பணக்காரர்கள் மத்தியில் நிலவிய ஐக்கியமேயாகும். சாதாரண தமிழ்-சிங்கள மக்களிடையே இந்த ஐக்கியம் நிலவியது கிடையாது. இதற்கு இந்தப் பணக்காரத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்ததும் கிடையாது. வடக்கில் டாக்டர் நாகநாதன், சுந்தரலிங்கம் போன்ற தலைவர்கள் இனவாதத்தைக் கிளறும்போது தெற்கிலும் கே.எம்.பி.ராஜரட்ன போன்றவர்கள் இனவாதத்திற்குத் தூபம் போட்டனர். இதற்கு ஒரு வரலாறேயுண்டு. சிங்கள மொழியில் மாத்திரமே அரச கருமங்கள் நடத்தவேண்டுமென்ற யோசனையை 56இல் நடைபெற்ற ஐ.தே.க. மகாநாட்டுக்கு முதலில் கொண்டு வந்தவர் ஜே.ஆர். தான் - ச.மா.சபை எதிர்க்கட்சி உறு

www.tamilarangam.net

ப்பினர்

22.01. 1992 (வீ) ****
பதுளையில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 41 தோட் டத் தொழிலாளர்கள் பூஸா முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அகதிகள் இந்தியாவிலிருந்து திரும்புவதற்கான உகந்த சூழ்நிலை இல்லை என்பதே எனது உளப்பூர்வமான நம்பிக்கை. அகதிகளை திருப்பியனுப்புவது உரிய காலத்திற்கு முந்திய செயல். நாடு திரும்பும் அகதிகள் பாதுகாப்புடனும், கௌரவத்துடனும் வாழமுடியும் என நான் நினைக்கவில்லை - அகதிகளுக்குப் பணியாற்றும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவன ஊழியர்

23.01 .1992 (வீ) ****
இலங்கை அகதிகள் 614 பேரை ஏற்றிக்கொண்டு இந்தியக் கப்பல் திருகோணமலையை வந்தடைந்துள்ளது.

நுவரெலியாக் கல்வித் திணைக்களத்திற்கு உட்பட்ட எல்பொட வடக்கு தமிழ்ப் பாடசாலையில் பயிலும் 114 மாணவர்கள் தளபாடங்கள் இல்லாத நிலையில் நின்று கொண்டே கல்வி கற்கின்றனர். இவர்களின் அவலம் குறித்து மத்திய மாகாண கல்வியமைச்சு, கல்வியதிகாரிகள், கல்வித்திணைக்களம் ஆகியவற்றிற்கு பல முறை தெரிவித்தும் நிலைமை தொடர்ந்தும் கவனிப்பாரற்ற நிலையிலேயேயுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் ஆலையடி வேம்புப் பகுதியைச் சுற்றிவளைத்த அரசபடையினர் சுமார் 12 வயதிற்குட்பட்ட 20 சிறுவர்களை முகாமுக்குக் கொண்டுசென்றுள்ளனர். இவர்கள் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

யாழ்குடாநாட்டுக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை கடலில் வைத்து படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள மீனவர்களை விடுவிக்கக் கோரியும், மீனவர்களின் ஜீவனோபாயத்திற்கு வசதி செய்யும் விதத்தில் கடலில் தொழில் வலயம் ஒன்றை அமைத்துத் தருமாறு கோரியும் யாழ்நகரில் மீனவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடாத்தினர்.

24.01. 1992 (வீ) ****
பசறை பகுதியில் புலிப்படையினர் என்று கூறி கொள்ளையடித்த சிங்களவர்களைக் கொண்ட கோஷ்டியை பொலிஸார் பிடித்துள்ளனர்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பாக தொண்டமான் முன் வைத்துள்ள யோசனை உண்மையிலேயே சிங்களமக்களுக்குப் பாதகமானது. சிங்களமக்களைக் காட்டிக் கொடுப்பது. இதை மனப்பூர்வ மாக எதிர்க்கின்றோம் - சு.க

25.01 .1992 (வீ) ****
இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கென தொண்டமான் முன் வைத்திருக்கும் யோசனைகளை எதிர்க்கும் போர்வையில் சிங்களமக்கள் மத்தியில் தமிழ்மக்களுக்கெதிரான உணர்வை மீண்டும் வளர்க்கும் கைங்கரியத்தில் சில முன்னணிப் பிரமுகர்களும், பேரினவாதச் சக்திகளும் ஈடுபட்டிருக்கின்றன. ஜேர்மனியிலும், ஒஸ்ரியாவிலும், ஐரோப்பாவின் மற்றும் சில பகுதிகளிலும் நவநாஜிகளால் வெளிப்படுத்தப் படும் இனவெறிக் கருத்துகளுக்கு ஒப்பானவையே இந்தப் பேரினவாதச் சக்திகளின் பிரச்சாரங்களும்.

அரியாலை, நாவற்குழி அகதி முகாம்களில் ஒருவித விஷக் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் பாதிக்கப்பட்டோருக்கு உரிய சிகிச்சையளிக்கப்படாவிட்டால் 3 நாட்களின் பின் உயிராபத்து ஏற்படலாம். மேற்படி அகதி முகாம்களிலுள்ள அனைத்துக் குடும்பங்களும் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளன. 7 வயதுச் சிறுமியொருத்தி இந்நோயால் மரணமாகியுள்ளாள்.

26.01.1992 (வீ) ****
மகாநாயக்க தேரோ வட பகுதி சென்று நாகவிகாரையை வணங்கி விட்டு, யுத்த நிலவரத்தையும் பார்வையிட்டு, யுத்தத்தைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு அரசபடைகளை ஆசீர்வதித்துள்ளார்.

தமிழர்கள் தாம் வாழும் இடங்களை பாதுகாக்க முற்படும் போது அது தேசத் துரோகச் செயல் என கிளர்ந்தெழுகின்ற பௌத்த குருமார்கள் பௌத்த கோயில்களுக் குரிய காணிகள், சிங்களப் பிரதேச காணிகள் 99 வருடக் குத்தகைக்குக் கொடுக்கப்படும் போது, வெளிநாட்டவருக்குத் தாரைவார்க் கப்படும்போது ஏன் எதிர்த்துப் பேசுவதில்லை? தமிழர் தம் பிரதேசம் குறித்துப் பேசும்போது மட்டும் தேசாபிமானம் கிளர்ந்தெழுகிறது. வெளிநாட்டவர் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை சுவீகரிக்கும் போது எங்கே தேசாபிமானம்? - வாசுதேவா

28.01.1992 (வீ) ****
இலங்கைப் பிரஜைகள் முன்னணியினர் மாத்தறையில் நடாத்திய மனித உரிமைகள்

கண்காட்சியில் படங்கள், உபகரணங்கள் உட்பட சகல பொருட்களும் முகமூடி நபர்களினால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. கடந்தகாலத்தில் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள், குரூரக் கொலைகள், சித்திரவதைகள் ஆகியவற்றை விளக்கும் புகைப்படங்களும், காணாமற் போனவர்களின் புகைப்படங்களும் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இனப்பிரச்சினை தொடர்பாக தொண்டமான் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொள்ளுமுகமாக சுதந்திரக்கட்சியில் ஒரு பிரிவினர் 'தேசிய பாரம்பரியம்' என்ற பெயரில் புதிய இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளனர்.

29.01.1992 (வீ) * * * *

யாழ்குடாவின் மீது அரசபடையினர் தாக்குதல் நடத்துவர் என்ற பீதி அங்குள்ள மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இத்தகையதோர் தாக்குதலினால் குடிமக்கள் பலரும் உயிரிழக்கும் நிலை உருவாகும் என அஞ்சப்படுகிறது. போரில் சம்பந்தப்படாத மக்களை அப்புறப்படுத்துவதற்கு யாழ்குடாவில் இடமில்லை - யாழ் சென்று வந்த கத்தோலிக்க துறவறச் சபைகளின் ஒன்றியத் தூதுக்குழு

அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு மட்டுமே உலர் உணவுப் பொருட்களை வழங்குவதென்றும், முகாம்களுக்கு வெளியே தங்கியிருப்பவர்களுக்கு அவற்றை வழங்குவதில்லையெனவும் அறிவிக்கப்பட்டதினால் முகாமுக்கு வெளியே வாழும் பெருமளவு அகதிகள் வீடு வீடாகச் சென்று உணவுப்பொருட்களை பிச்சையெடுத்து ஜீவனோபாயத்தைச் சமாளித்துவருகின்றனர்.

தொண்டமானின் உத்தேச யாழ் விசயம் குறித்து நாம் நம்பிக்கை கொண்டிருந்தோம். ஆனால் அமைச்சரின் யோசனைகளுக்கு பலத்த எதிர்ப்பு கிளம்பியிருப்பதால் நாம் ஏமாற்றமடைந்திருக்கிறோம். எனினும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான கதவுகள் இன்னமும் திறந்தேயுள்ளன. ஒற்றையாட்சிமுறையின் கீழ் சுயநிர்ணய உரிமையுடன் வாழ சமஷ்டி ஆட்சிமுறையை நாம் வலியுறுத்துகின்றோம் - புலிகள்

30.01.1992 (வீ) * * * *

மனித உரிமைகள் விவகாரத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை அண்மையில் செய்த விதப்புரைகளை இலங்கையரசு ஏற்றுக்கொள்வதாக உறுதியளித்தபோதிலும். இலங்கை மக்கள் இன்னமும் அடாத்தான கைது, விவரம் தெரிவிக்கப்படாத நிலையில் தடுத்துவைப்பு, உத்தியோகபூர்வமற்ற தடுப்புக்காவல் நிலையங்களில் வைக்கப்படுதல், சித்திரவதை மற்றும் மரணம் ஆகியவற்றுக்களாகிறார்கள். சட்ட விரோதமாக மக்களைத் தடுத்து வைப்பதும், கைதிகள் இருக்கும் இடங்களை அவர்களின் குடும்பத்தினருக்கு அறிவிக்க அதிகாரிகள் தவறுவதும் அறவே ஏற்றுக் கொள்ள முடியாதவை - கனடிய மனித உரிமைகள் குழு

நீதி விசாரணைகளுக்கு புறம்பான கொலைகள், பணம் பறிப்பு, கைதிகளைத் தவறாக நடாத்துதல் உட்பட புலிகளினால் இழைக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து சான்றுகளுடன் கனடிய மனித உரிமைகள் குழுவுக்கு விபரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து அனுப்பப்பட்ட இரண்டாவது தொகுதி அகதிகள் 659 பேர் திருமலையை வந்தடைந்துள்ளனர்.

31.01.1992 (வீ) * * * *

கொக்கட்டிச்சோலையில் நடந்த பொதுமக்களின் படுகொலைகளுக்கு கொக்கட்டிச்சோலையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரே பொறுப்பு என சனாதிபதி ஆணைக் குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வொய்ஸ் ஒவ் அமெரிக்கா அஞ்சல் நிலையத்தை நிறுவுவதற்கான யோசனையை இலங்கை நடைமுறைப்படுத்துமெனவும், இத் திட்டம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையிலான ஒப்பந்தம் என்றும், இதைக் கடைப்பிடிக்க இலங்கை கடமைப்பட்டுள்ளதென்றும் அமைச்சரவைப் பேச்சாளர் கூறியுள்ளார்.

எட்டியாந்தோட்டையைச் சேர்ந்த கும்பலுறாபிட்டியா தோட்டம் உதவி அரச அதிபரால் மூடப்பட்டுள்ளதால் இங்கு வேலைசெய்த 47 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர். வியாபார சுவீகரிப்பு மசோதாவின் கீழ் தோட்டங்கள் பொறுப்பேற்கப்பட்டால் தொழிலாளர்கள் வழக்காடும் உரிமையையும் இழப்பர்.

